வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 05.07.2025 சனிக்கிழமை இதழ் : 186 பக்கங்கள் : 12

# முன்னேற்ற பாதையில் பயணிக்கும் இலங்கை!

## நம்பிக்கை வெளியிட்ட நாணய நிதியம்



வொஷிங்டன், ஜூலை 05

**சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு பெற்ற திட்டத்தின் கீழ், இலங்கையின் பொருளாதார மீட்சி, முன்னேற்றத்திற்கான நம்பிக்கைக் குரிய அறிகுறிகளைக் காட்டுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

சர்வதேச நாணய நிதிய நிர்வாகக் குழுவின் துணை நிர்வாக இயக்குநரும், செயல் தலைவருமான கென்ஜி ஒகமுராவின் அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் செயல் திறனை, சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக சபை அண்மையில் மதிப்பாய்வு செய்ததை தொடர்ந்து, இந்த கருத்தை ஒகமுரா வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் சீர்திருத்த முயற்சிகளைப் பாராட்டிய ஒகமுரா, முக்கிய சீர்திருத்தங்கள் உறுதியான முடிவுகளைத் தரத் தொடங்கியுள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

11



## 37 எலும்புக்கூடுகள் முழுமையாக மீட்பு!

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஜூலை 05

அரியாலை சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் இருந்து இதுவரை 37 மனித எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டது.

அரியாலை சித்துப்பாத்தி மனித புதைகுழி அகழ்வுப் பணிகள் தொடர்பாக நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன் இதனைக் கூறினார்.

11

## அமெரிக்க வரிகளால் இலங்கையின் உள்நாட்டு உற்பத்தி குறையக்கூடும்!

### சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 05

இலங்கை ஏற்றுமதிகள் மீதான அமெரிக்காவின் 44 சதவீத ஒத்தி வைக்கப்பட்ட வரி விதிப்பால் தீவு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 1.5 வீதம் வரை குறையக்கூடும் என்று சர்வதேச நாணய நிதியம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு வரலாறு காணாத டொலர் பற்றாக்குறையால் நிதி நெருக்கடியில் சிக்கிய இலங்கை, 2023 மார்ச் மாதம் உலகளாவிய கடன் வழங்குநரிடமிருந்து 2.9 பில்லியன் டொலர் நான்கு ஆண்டு திட்டத்தைப் பெற்றதிலிருந்து வலுவாக மீண்டுள்ளது.

ஆனால், அமெரிக்காவால் தூண்டப்பட்ட வர்த்தகக் கொந்தளிப்பு, தீவு நாட்டின் சுமார் 3 பில்லியன் டொலர் ஏற்றுமதிகளுக்கு 44 வீத இறக்குமதி வரிகளை விதித்தது.

11

## முன்னாள் அமைச்சர் சந்திரசேன கைது!

கொழும்பு, ஜூலை 05

முன்னாள் அமைச்சர் எஸ். எம். சந்திரசேன நேற்றுக் காலை இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டார்.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது நெருங்கிய சகாக்களுக்கு 25 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள சோள விதைகளை விநியோகித்த சம்பவம் தொடர்பாகவே இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பில் முன்னெடுக்கப்படும்

11



## தேர் கலசம் கழன்று வீழ்ந்து பெண் ஒருவர் உயிரிழப்பு!

### முல்லைத்தீவில் துயரச் சம்பவம்

முல்லைத்தீவு, ஜூலை 05

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் கிழக்கு குருந்தடி பிள்ளையார் ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்று நடைபெற்றபோது தேர் வீதி உலா வரும்வேளை அதன் கலசம் மின் இணைப்பு வயரில் சிக்கி கழன்று வீழ்ந்தில் பெண் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றுமொரு பெண் படுகாயமடைந்தார்.

முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய சங்கரப்பிள்ளை சசிகலா என்ற பெண்ணே இதன்போது உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. காயமடைந்த பெண் சிகிச்சைக்காக

11

## யாழில் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட ஒன்றரை வயதுக் குழந்தை சாவு!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜூலை 05

யாழ்ப்பாணத்தில் ஒன்றரை வயது நிரம்பிய ஆண் குழந்தை ஒன்று நேற்று பரிதாபமாக உயிரிழந்துள்ளது. அச்சுவேலி வடக்கு பகுதியைச் சேர்ந்த அந்தோனிராஜன் கன்ஸ்ரன் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தைக்கு நேற்றுமுன்தினம் காய்ச்சல் ஏற்பட்டது. இந்நிலையில் தாயார் பனடோல் சிறப் கொடுத்துள்ளார். பின்னர் நேற்றுக் காலை குழந்தை அழுது விட்டு மயக்கமடைந்தது.

குழந்தையை அச்சுவேலி வைத்தியசாலைக்கு

11



## பருத்தித்துறையில் இருந்து கொழும்பு சென்ற பஸ் விபத்து!

### 21 பேர் காயம்

கொழும்பு, ஜூலை 05

பருத்தித்துறையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் விபத்துக்குள்ளானதில் 21 காயமடைந்துள்ளனர்.

சிலாபம் - புத்தளம் வீதியின் தெதுரு ஓயா பாலத்திற்கு அண்மையில் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த பஸ் வீதியை விட்டு விலகி மரமொன்றில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

11

## கைது பயத்தைக் காட்டி எம்மை ஒடுக்க முடியாது

### நாமல் ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 05

கைது செய்யப்படுவீர்கள், சிறையில் அடைக்கப்படுவீர்கள் என அச்சுறுத்தி எதிரணிகளை மௌனிக்க வைப்பதற்கு அரசாங்கம் முற்பட்டால், அந்த விடயம் ஒரு போதும் நடக்காது என சூளுரைத்துள்ளார் நாமல் ராஜபக்ஷ.

11

## வடக்கு மாகாண மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறும்!

### கூறுகிறார் நீதி அமைச்சர்

கொழும்பு, ஜூலை 05

“வடக்கு மக்கள் நீதியை எதிர்பார்க்கின்றனர். அதன் அடிப்படையிலேயே தேசிய மக்கள் சக்திக்கு ஆணை வழங்கினர். அம்மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்படும்.” - என்று நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது எழுப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்குரிய முயற்சிகள் தொடரும். இது

11

**உண்மைகள் புனிதமானவை: கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் சூழ்ச்சி வெளிப்பட்டமையினால் அமைச்சர் பிமல் கோபமடைவது இயல்பு

## கூறுகின்றார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், ஜூலை 05

அரசாங்கத்தினால் அபகரிக்கப்படவிருந்த நிலங்கள் எமது நடவடிக்கைகளின் விளைவாகவே பாதுகாக்கப்பட்டது என்பதை உறுதி செய்த அமைச்சருக்கு நன்றி கூறுவதாகத் தெரிவித்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், அவர்களது சூழ்ச்சி வெளிப்பட்டமையினால் அமைச்சர் பிமல் ரத்நாயக்க கோபமடைவது இயல்பான விடயமேயாகும் எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 5,940 ஏக்கர் காணிகளை 3 மாத காலத்துக்குள் எவரும் உரிமை கோராது விடின், அவை அரச காணிகளாகப் பிரகடனப்படுத்தப்படும் என அரசாங்கத்தினால் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கடந்த மார்ச் மாதம் 28ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட 2430 எனும் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

காணிகளைக் கையகப்படுத்துவதற்கு வாய்ப்பளிக்கக்கூடிய இவ்வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக சுமந்திரனால் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டது. அது குறித்த விசாரணைகளை அடுத்து அவ்வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்தது.

அதனையடுத்து அரசாங்கத்தினால் கடந்த வெள்ளிக்கிழமை இரவு வெளியிடப்பட்ட 2443 எனும் இலக்க வர்த்தமானியின் ஊடாக மேற்குறிப்பிட்ட 2430 எனும் இலக்க வர்த்தமானி இரத்துச் செய்யப்பட்டது.

இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, சுமந்திரன் போன்றோர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பணியாற்றியமையினால் அவர்கள் தம்மையும் ரணிலைப் போன்று கருதுவதாகக் குறிப்பிட்டார். அத்தோடு காணி உரித்தை உறுதிப்படுத்தும் நோக்கில் தாம் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தல் அரசியல் மற்றும் இனவாத அடிப்படையிலான கருத்துக்களின் விளைவாக இடைநிறுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.



அதற்கு தனது உத்தியோக பூர்வ எக்ஸ் தளத்தில் செய்திருக்கும் பதிவின் ஊடாகப் பதிலளித்துள்ள சுமந்திரன், "அவர்கள் எதனை வேண்டுமானாலும் கூறட்டும். தமது சூழ்ச்சி வெளிப்பட்டமையினால் அமைச்சர் கோபமடைவது இயல்பான விடயமேயாகும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு "அபகரிக்கப்படவிருந்த நிலங்கள் எமது நடவடிக்கைகளின் விளைவாக பாதுகாக்கப்பட்டமையை உறுதிசெய்த அமைச்சருக்கு எமது நன்றிகள். இவ்விடயத்தில் தொடர்ந்தும் அவதானமாகவே இருப்போம்" என்றும் சுமந்திரன் பதிவிட்டுள்ளார். (அ)

# வடமராட்சி கிழக்கில் கேரளக் கஞ்சா மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 05

வடமராட்சி கிழக்கு மாமுனைபகுதியில் நேற்று முன்தினம் இரவு பெருந்தொகையான கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

கடற்படையினர் மற்றும் மருதங்கேணி பொலிசார்க்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் 38 பொதிகளில் அடைக்கப்பட்ட 71 கிலோ 400 கிராம் கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட கேரளா கஞ்சா மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# வாகன விபத்தில் முதியவர் மரணம்!

வவுனியா, ஜூலை 05

வவுனியா - யாழ். வீதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் முதியவர் ஒருவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்தார்.

குறித்த விபத்து வவுனியா - யாழ் வீதியில் புதிய பஸ் நிலையத்துக்கு அண்மையில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

யாழில் இருந்து வவுனியா நோக்கி வந்துகொண்டிருந்த வான் ஒன்று சைக்கிளில் பயணித்த முதியவர் மீது மோதியமையே குறித்த விபத்துக்குக் காரணமென தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் விபத்தில் படுகாயமடைந்தவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரின் விசாரணையில் உயிரிழந்தவர் யாழ்ப்பாணம் புளியங்கூடலைச் சேர்ந்த 69 வயதான ஜெகதீஸ்வரன் எனத் தெரிய வந்துள்ளது.

இவ் விபத்து தொடர்பாக வவுனியா போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# கல்மடுநகர் சித்த வைத்தியசாலைக்கு கடற்றொழில் அமைச்சர் திடீர் விஜயம்

கிளிநொச்சி, ஜூலை 05

கிளிநொச்சி - கல்மடுநகர் கிராமிய சித்த வைத்தியசாலை மற்றும் மாகாண மூலிகைக் கிராமத்திற்கு கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர் ஜெ.ரஜீவன், கண்டாவளை பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன் ஆகியோர் நேற்று முன் தினம் கள விஜயம் மேற்கொண்டனர். இதன் போது வைத்தியசாலையின் செயற்பாடுகள், வழங்கப்படும் சேவைகள், மாகாண மூலிகை கிராமத்தின் வருமானம் ஈட்டும் முறைகள் எதிர்கோள்ளும் பிரச்னைகள் சம்பந்தமாக கலந்துரையாடியதுடன் மூலிகைச் சுற்றுலா சம்பந்தமான முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பிலும் கலந்துரையாடினர். இதன் போது கடினமான சூழ்நிலைகளிலும் பணியாற்றும் வைத்தியர்கள் உள்ளிட்ட பணியாளர்களை அமைச்சர் பாராட்டியதுடன் உரிய அபிவிருத்தி திட்டங்களுக்கான ஆக்க பூர்வமான முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு கேட்டுகொண்டார்.

தொடர்ந்து மூலிகைக் கிராமத்தில் அமைச்சர் உள்ளிட்ட குழுவினரால் தான்றி மரங்கள் நடப்பட்டி வைக்கப்பட்டன. இதன்போது கல்மடு நகர் கிராமிய வைத்தியசாலையை மையப்படுத்தி மருந்தில்லா மருத்துவத்திற்கான மத்திய நிலையம் ஒன்றை உருவாக்குவது தொடர்பான திட்ட முன்மொழிவொன்றும் அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது. (அ)

# ஒட்டுசுட்டானில் படை வசம் உள்ள காணிகள் விடுவிக்கப்படவேண்டும்

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் வலியுறுத்து

முல்லைத்தீவு, ஜூலை 05

ஒட்டுசுட்டான் நகரை அண்டிய பகுதியில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பொதுமயானக்காணி மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குரிய 25 ஏக்கர் காணிகள் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும் என்று வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தினார்.

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று முன் தினம் இடம்பெற்ற நிலையிலேயே இந்த விடயம் வலியுறுத்தப்பட்டது.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தெரிவிக்கையில்-

ஒட்டுசுட்டானில் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குரிய 25 ஏக்கர் காணிகளையும், அதனோடு இணைந்த பொது மயானத்தையும் இராணுவத்தினர் அபகரித்துள்ளனர்.



ஒட்டுசுட்டான் பகுதியிலுள்ள மக்கள் இறந்தவர்களின் உடலங்களை பேராறு பொது மயானத்திற்கு நீண்டதூரம் கொண்டுசெல்லவேண்டிய அவலநிலை காணப்படுகின்றது.

இவ்வாறாக பலவழிகளிலும் மாறி மாறி வரும் அரசாங்கங்கள் எமது மக்களை தொடர்ந்தும் துன்பப்படுத்துகின்ற நிலமைகளே காணப்படுகின்றன.

இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். உடனடியாக ஒட்டுசுட்டான் நகர் பகுதியை அண்மித்துள்ள இராணுவ முகாம் அகற்றப்பட்டு பொது மயானக்காணி உடனடியாக விடுவிக்கப்படுவதுடன், நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குரிய 25ஏக்கர் காணிகளும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் - என்றார்.

இந்த நிலையில் இராணுவத்தின் பிடியிலுள்ள பொது மயானக்காணி மற்றும், நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குரிய காணி என்பன அரசாங்கத்தால் விரைவில் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரால் தெரிவிக்கப்பட்டது. (அ)

# இலங்கைக்கு கடத்த முற்பட்ட 132 கிலோ கடல் அட்டை மீட்பு

சென்னை, ஜூலை 05

தமிழ்நாடு இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் அடுத்த பாம்பன் கடற்கரையில் இலங்கைக்கு கடத்துவதற்காக வைக்கப்பட்டிருந்த 132 கிலோ கடல் அட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பாம்பன் தெற்குவாடி கடற்கரையில் நேற்று கலை குறித்த கடலட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சட்ட விரோதமாக கடல் அட்டைகள் பதுக்கி வைத்திருப்பதாக மண்டபம் வனத்துறை அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அப்பகுதிக்கு சென்ற வனத்துறையினர் அங்கு ஒரு குடிசையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் ஒரு இலட்சம் மதிப்பிலான 132 கிலோ கடல் அட்டைகளை பறிமுதல் செய்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரை கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# வவுனியாவில் ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் கல்வி நிலையங்கள் விடுமுறை!

வவுனியா, ஜூலை 05

வவுனியா நகரில் ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் கல்வி நிலையங்களுக்கு விடுமுறை வழங்க வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் நடைபெற்ற வவுனியா பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இதன்போது வவுனியா பிரதேச செயலாளர் பிரதாபன், ஞாயிற்றுக் கிழமைகளில் அறநெறி வகுப்புக்களைக் கருத்தில் கொண்டு தனியார் கல்வி நிலையஙகளுக்கு விடுமுறை வழங்கவேண்டும் என பலரும் சுட்டிக் காட்டியிருந்ததாகவும் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த வவுனியா மாநகர சபை மேயர் சு.காண்டீபன், ஞாயிற்றுக் கிழமைகளில் தரம் 10 இற்கு கீழ் தனியார் கல்வி நிலையங்களை நடத்துவதற்கு தடை விதித்து மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது எனவும், அதனை தாம் மாநகர எல்லைக்குள் நடைமுறைப்படுத்துவதாகவும் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து, ஞாயிற்றுக் கிழமைகளில் தரம் 10 இற்கு கீழ் உள்ள மாணவர்களுக்கு தனியார் கல்வி நிலையத்தை நடத்த முடியாது என தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் 10 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கற்கும் இடங்களில் மாணவிகள் மாற்றும் மாணவர்களுக்கான மலசல கூட வசதி, குடிதண்ணீர் வசதி என்பன இருக்கவேண்டும் எனவும், அதனை சுகாதார பரி சோதகர்கள் கண்காணிக்க வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
05.07.2025 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 21

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## சாதகமற்ற அரசியல் நிலைமை

உலகில் பல நாடுகளில் போர்க்குற்ற விசாரணை மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயங்களுக்கான அமெரிக்க நிதியை நிறுத்துமாறு வெள்ளை மாளிகை பரிந்துரைத்திருக்கின்றது. இறுதி முடிவை விரைவில் அமெரிக்க அதிபர் எடுக்கவுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகளுக்கு அமெரிக்க நிதி இன்றியமையாதது.

அமெரிக்காவின் ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவானதைத் தொடர்ந்து. அமெரிக்காவின் உள்ளக கட்டமைப்புக்களில் பல அதிரடியான மாற்றங்களை அவர் மேற்கொண்டு வருகின்றார். 'முதலில் அமெரிக்கா' என்னுமடிப்படையில் அவர் மேற்கொள்ளும் மாற்றங்களுக்கு அமெரிக்க செனட் மற்றும் காங்கிரஸ் ஆதரவளித்துவருகின்றது. இந்த நிலையில் அமெரிக்க உதவி நிறுவன செயல்பாடுகளை ட்ரம்ப் முடக்கினார். இதனால் உலகெங்கும் பல அரசுசாரா நிறுவனங்கள் பாதிக்கப்பட்டன. அமெரிக்க நிதி அமெரிக்காவின் நலன்களுக்கு பயன்படவில்லை என்னும் குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே ட்ரம்ப் இவ்வாறான மாற்றங்களை மேற்கொண்டு வருகின்றார்.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் போர்க் குற்ற விசாரணைகளுக்கான நிதியையும் நிறுத்துமாறு வெள்ளை மாளிகை அறிக்கையிட்டிருக்கின்றது. இந்த பரிந்துரை அங்கீகரிக்கப்படுமானால் உலகில் பல நாடுகளில் இடம்பெற்றதாக கருதப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயங்கள் முற்றாக கைவிடப்படும் நிலைமை ஏற்படும்.

இலங்கையின் இறுதி யுத்தத்தின்போது போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருப்பதான குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே தமிழர் தரப்புக்கள் கடந்த பதினைந்து வருட கால அரசியலை முன்னெடுத்து வந்திருக்கின்றன. ஆனால் தற்போது ஏற்பட்டுவரும் உலகளாவிய அரசியல் மாற்றங்கள் இலங்கைக்கு முற்றிலும் சாதகமான நிலையில் காணப்படுகின்றது.

குறிப்பாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை பொறுத்தவரையில் ஏற்கனவே பொறுப்புக் கூறல் விடயத்தில் பாதுகாப்பான வளையத்திற்குள்தான் இருக்கின்றது. ஏனைய அரசாங்கங்களை அணுகியது போன்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை தமிழர் தரப்புக்கள் அணுகமுடியாது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டர்க் ஜனாதிபதி அனுரகுமார திஸநயக்கவிடம் உள்ளக பொறிமுறையை வலியுறுத்திச் சென்றிருந்தார்.

மனித உரிமை சார்ந்து வெளிநாடுகளில் தலையீடு செய்யும் வெளிவிவகாரக் கொள்கையை அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமுமே கொண்டிருக்கின்றது. அமெரிக்கவே தலையீடு செய்யும் ஆற்றலைக் கொண்டிருக்கின்றது. ஆனால் ஜனாதிபதி ட்ரம்ப் தலைமையிலான குடியரசு கட்சியின் சர்வதேச அணுகுமுறையானது இதுவரையான அமெரிக்காவின் உலகளாவிய அணுகுமுறைகளில் பெரியளவில் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்த பின்புலத்தில் நோக்கினால் தமிழரின் இராஜதந்திரப் போராட்டக் கதைகள் அனைத்தும் கிட்டத்தட்ட முடிந்துவிட்டது. இவ்வாறானதொரு சூழலில் தமிழர் நலனை முன்வைத்து தமிழ் கட்சிகளால் என்னதான் செய்ய முடியும்? இந்தக் கேள்வியின் அடிப்படையில் சிந்தித்தால் கண்டடையக் கூடிய ஒரேயொரு பதில்தான் உண்டு அதாவது. முதலில் தமிழ் தரப்புக்கள் அனைத்தும் தங்களுக்குள் தீண்டாமையை விடுத்து ஒன்றுபட வேண்டும். தமிழ் மக்களின் அரசியலை ஒரு ஜனநாயக கோரிக்கையாக முன்வைக்க வேண்டும். பிரபாகரன் தேசியத் தலைவர், அவரால் வழிடத்தப்பட்டவர்கள், மாவீரர்களின் கனவு இவ்வாறான கதைகளை விடுத்து, எங்களின் கோரிக்கை அடிப்படையில் ஒரு ஜனநாயகக் கோரிக்கை என்பதை இலங்கைக்கும் இலங்கைக்குள் தங்களுடைய நலன்களை தேடுவோருக்கும் வலியுறுத்த வேண்டும். அதனை எழுந்தமானமாக நிராகரிக்க முடியாதளவிற்கு அந்தக் கோரிக்கையை முன்வைக்க வேண்டும். மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள், எங்களின் ஜனநாயக உரிமையை மறுதலிக்காதீர்கள் என்பதிலிருந்தே அந்தக் கோரிக்கை கட்டமைக்க முடியும்.

## கிளிநொச்சியில் பாடசாலை மணவர்களுக்கான உணவூட்டல் நிகழ்ச்சித் திட்டம் குறித்து ஆராய்வு

*கிளிநொச்சி, ஜூலை 05*

உலக உணவுத் திட்டம், பாடசாலை மாணவர்களுக்கான உணவூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தினை கிளிநொச்சி மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இந்தத் திட்டம் தொடர்பில் சர்வதேச லயன்ஸ் கழகம் மற்றும் உலக உணவுத் திட்ட அதிகாரிகள் நேற்று முன் தினம் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரனை சந்தித்து கலந்துரையாடினர்.


இத் திட்டத்திற்கு நிதி உதவி வழங்கும் சர்வதேச லயன்ஸ் கழகத்தின் ஆசிய பிராந்தியத்திற்கான தலைவர்இ வட மாகாணத்தை உள்ளடக்கியதாக புதிதாக உருவாக்கப்பட்டிருக்கின்ற டி12 என்ற சர்வதேச லயன்ஸ் கழகத்தின் மாவட்டத்தின் முதலாவது ஆளுநர், துணை ஆளுநர், மூத்த லயன்ஸ் கழகப் பிரதிநிதி ஆகியோர் அடங்கிய குழுவினர் மற்றும் உலக உணவுத் திட்ட அதிகாரிகள் அடங்கிய குழுவினர் குறித்த கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட சமர்த்திப் பணிப்பாளர், திட்டமிடல் பணிப்பாளர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், கரைச்சி பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

கலந்துரையாடலுக்கு முன்னர் கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்திற்கு குறித்த அதிகாரிகள் அடங்கிய குழுவினர் சென்று மாணவர்களுக்கு நேரடியாக உணவூட்டம் செய்தனர். கலந்துரையாடலைத் தொடர்ந்து இத்திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ள பளை பிரதேசத்தின் கோழி வளர்ப்பு மற்றும் விவசாய பயனாளிகளையும் சென்று பார்வையிட்டிருந்தனர். (அ)

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடந்த விசேட கல்வி ஆசிரிய மாணவர் ஒன்றுகூடல்





*யாழ்ப்பாணம், ஜூலை 05*

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விசேட கல்வி ஆசிரிய மாணவர்கள் முன்னெடுத்த ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று முன் தினம் வியாழக்கிழமை காலை ரதி லக்ஷ்மி மண்டபத்தில் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் அதிதி பேச்சாளராக யாழ்ப்பாண பல்கலைக்கழக சமுதாய மற்றும் குடும்ப நல மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர். சுபாஸ்சந்திரன் குமரன் கலந்து கொண்டார்.


நிகழ்வில் வாழ்த்துரையை வடக்கு மாகாண கல்வித்திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் லதாங்கி அம்பிகைபாகன் ஆற்றினார்.

நிகழ்வை ஆசிரிய மாணவி சம்பத்குமார் தர்மினி முன்னிலைப்படுத்தினார். விசேட கல்விநெறி ஆசிரிய மாணவி சாஜகான் பாத்திமா நுஸ்லா விசேட கல்வியின் தற்போதைய செந்நெறிகள் என்ற பொருளில் உரையாற்றினார். இவ்வுரை சமநேரத்தில் ஆசிரிய மாணவர் தங்கராசா தர்ஷனால் சைகைப் பரிபாஷையில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டது.

இன்றைய நிகழ்வில் புதிதாக நியமனம் பெற்று கலாசாலையில் திசை முகப்படுத்தல் பயிற்சியை பெறும் இலங்கை ஆசிரியர் கல்வியாளர் சேவை தமிழ் மொழி மூல உத்தியோகத்தர்கள் 86 பேர் கலாசாலை ஒன்றுகூடல் நிகழ்வு அவதானிப்பாளர்களாக கலந்து கொண்டனர்.

வாழ்த்துரை வழங்கிய பிரதிக்கல்விப் பணிப்பாளர் லதாங்கி அம்பிகைபாகன், டாக்டர்.சுபாஸ்சந்திரன் குமரன் ஆகியோர் கலாசாலை முகாமைத்துவ குழுவினரால் கௌரவிக்கப்பட்டனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜுலை - 05 சனிக்கிழமை
விசுவாவசு வருடம் - ஆனி 21
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : தசமி




**மேடம்**
மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**இடபம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். நன்மை நடக்கும் நாள்.

**மிதுனம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களை கவர சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதுமை படைக்கும் நாள்.

**கடகம்**
எதிர்பார்த்த சில வேலைகள் தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**சிம்மம்**
தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்து கொள்வார்கள். முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். துணிச்சலுடன் செயல்பட வேண்டும்.

**கன்னி**
இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் யாவும் நீங்கும். வியாபாரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். உற்சாகமான நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் வேலைச்சுமை இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. நாவடக்கம் தேவைப்படும் நாள்.

**விருச்சிகம்**
எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிப்பீர்கள். போராடி வெல்லும் நாள்.

**தனுசு**
எதிர்பார்ப்பு நிறைவேறும். பெற்றோர் பக்கபலமாக இருப்பார்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். அமோகமான நாள்.

**மகரம்**
அனுபவப் பூர்வமாகவும் அறிவுப் பூர்வமாகவும் பேசி எல்லோரையும் கவர்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். உடல்நலம் பாதிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி குறை கூறுவார். பொறுமை தேவைப்படும் நாள்.

# ஒட்டுசுட்டானில் மணல் அகழ்வு அதிகரிக்க பொலிஸாரே காரணம்

## ரவிகரன் எம். பி. குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஜுலை 05
முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் அதிகரித்துள்ள சட்டவிரோத மணல் அகழ்வுச் செயல்பாடுகளுக்கு பொலிஸாரே காரணமென பாராளுமன்ற உறுப்பினர் து. ரவிகரன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் காலத்தில் இவ்வாறான சட்டவிரோத செயல்பாடுகள் இடம்பெற்றதில்லை என்றும் விடுதலைப் புலிகள் முறையாக சட்டம் - ஒழுங்கினைப் பாதுகாத்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்வுச் செயல்பாடுகள் அதிகரித்திருப்பதாகவும் அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற முன்மொழிவொன்றை ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் முன்வைத்தார். இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே ரவிகரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் தொடர்ச்சியாக பேசப்பட்டு வருகிறது. இருப்பினும், சட்டவிரோத மணல் அகழ்வுச் செயல்பாடுகள் தொடர்ச்சியாக மிக அதிகளவில் மேற்கொள்ளப்படுகின்ற நிலையே காணப்படுகிறது.

இவ்வாறு இங்கு சட்டவிரோத செயல்பாடுகள் தலைவிரித்தாடுகின்றபோது, சட்டம் - ஒழுங்கு முறையாக பேணப்படுவதாக பொலிஸாரோ, சட்டம் - ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டிய ஏனைய தரப்பினரோ போலிக் கருத்துக்களை இங்கு தெரிவித்துக்கொண்டிருக்கத் தேவையில்லை.

தற்போது இந்த நாட்டில் ஆட்சிபீடத்திலுள்ள அரசும் அரசுத் தலைவர்களும் கூட இந்த நாட்டில் சட்டம் - ஒழுங்கு பாதுகாக்கப்படுமெனக் கூறுகின்றனர்.

நாமும் சட்டம் - ஒழுங்கு முறையாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்றே தொடர்ந்து வலியுறுத்துகின்றோம்"- என்றார். (எ)

# அரச கரும மொழி வாரத்தை முன்னிட்டு வவுனியாவில் பொதுமக்கள் தின நிகழ்வு

வவுனியா, ஜுலை 05
அரச கரும மொழி வாரத்தை முன்னிட்டு வவுனியாவில் பிரதி அமைச்சர் முனீர் முழப்பரின் பங்கேற்புடன் விசேட நிகழ்வு நடைபெற்றது.

மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் அரச அதிபர் பீ. ஏ. சரத் சந்திர தலைமையில் நேற்று முன்தினம் இந்த நிகழ்வு நடைபெற்றது.

அரச கரும மொழிகள் வாரத்தை முன்னிட்டு "மனதை வெல்லும் வழி மொழியாகும்" என்னும் தொனிப் பொருளில் நாடு முழுவதும் பொதுமக்கள் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இதற்கமைவாக வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் தமிழ், சிங்கள, முஸ்லிம் கலாசாரத்தை வெளிப்படுத்தும் கலை நிகழ்வுகள் நடைபெற்றன. இதேவேளை, தெரிவு செய்யப்பட்ட பாடசாலை நூலகங்களுக்கு நூல்கள் வழங்குதல், அரச கரும மொழிகள் வாரத்தை முன்னிட்டு நடைபெற்ற சித்திரப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கல், இரண்டாம் மொழிக் கற்கையை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கல் என்பனவும் நடைபெற்றன. (எ-10)



# 25 ஆயிரம் ஏக்கர் காணிகளை விடுவிக்கும் பணி ஆரம்பம்!

## திலகநாதன் எம். பி. அறிவிப்பு

வவுனியா, ஜுலை 05
வவுனியாவில் கூகுள் வரைபடம் மூலம் வனவளத் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்ட 25 ஆயிரம் ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்கான ஆரம்ப கட்டப் பணிகளை முன்னெடுத்துள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ. திலகநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் வவுனியாவில் வாழ்கின்ற இடம்பெயர்ந்த மக்களுக்கும் காணியற்ற மக்களுக்கும் புதிதாக திருமணம் முடித்து காணிகள் அற்ற குடும்பங்களினதும் நன்மை கருதி அவர்களுக்கான ஒரு தீர்வை வழங்குவதற்கான நடவடிக்கையை தேசிய மக்கள் சக்தி அரசு எடுத்துள்ளது.

அந்தவகையில் கடந்த 2012ஆம் ஆண்டில் வவுனியா மாவட்டத்தில் கூகுள் வரைபடத்தின் மூலம் வனவளத் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்ட அனைத்து காணிகளையும் விடுவிப்பதற்கு தீர்மானித்துள்ளோம். குறிப்பாக இந்த மாவட்டத்தில் அண்ணளவாக 25 ஆயிரம் ஏக்கர் காணிகள் அவ்வாறு கையகப்படுத்தப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்திலும் வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் 52ஆயிரம் ஏக்கர் காணிகள் உள்ளன. அவை அனைத்தையும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் விரைவில் விடுவிக்கவுள்ளது.

அந்தக் காணிகளை அதன் உரிமையாளர்களுக்கும் காணிகள் அற்ற மக்களுக்கும் வழங்குவதற்கான துரித நடவடிக்கையை நாம் மேற்கொண்டுள்ளோம்- என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்களை பழிவாங்குவதற்கே எரிபொருள் விலை அதிகரிப்பு

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 05

**மக்களை பழிவாங்கும் நோக்கிலேயே எரிபொருட்களின் விலைகளை அரசாங்கம் அதிகரித்துள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்துள்ளார்.**

எதிர்க்கட்சி தலைவரின் பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், எரிபொருள் விலையைக் குறைப்போம் என கூறிக்கொண்டே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஆனால், உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை குறைவடையும் போது மக்களின் கழுத்தை நெரிக்கும் வகையில் எரிபொருள் விலையை அதிகரித்துள்ளது. இதன் தாக்கத்தால் நாடு வீழ்ச்சியடையும் - மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும்.

எரிபொருள் விலையை குறைக்க முடியமான நிலையிலேயே அதன் விலையை அரசாங்கம் அதிகரித்துள்ளது. மக்களின் கழுத்தை நெரித்தேனும் அரச வருமானத்தை அதிகரிப்பதே இந்த அசராங்கத்தின் நோக்கமாக உள்ளது. ஐ. எம். எவ்வின் நிபந்தனைகளை அடிமை போன்று நிறைவேற்றும் விடயத்துக்கே அரசாங்கம் தயாராகவுள்ளது. மாறாக மக்கள் விரும்பும் விடயத்தை மேற்கொள்ள அவர்கள் தயாராக இல்லை.

நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டே அசராங்கம் செயல்பட வேண்டும். இத்தகைய பின்னணியில் மக்களுக்கு நிவாரணம் வழங்கும் ஆட்சியை கொண்டு நடத்த நாம் தயார்.

உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தலில் வாக்குகள் குறைவடைந்ததாலேயே மக்களை பழிவாங்கும் நோக்கில் அரசாங்கம் எரிபொருட்களின் விலையை அதிகரித்துள்ளது - என்றார். (ஐ)

# போதைப்பொருட்களுடன் 3,216 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஜூலை 05

நாடளாவிய ரீதியில் கடந்த ஜூன் 27ஆம் திகதி நேற்று முன் தினம் வரையான காலப்பகுதிக்குள் பொலிஸார் நடத்திய விசேட நடவடிக்கைகளில் போதைப்பொருட்களுடன் 3 ஆயிரத்து 216 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, ஹெரோயினுடன் 959 பேரும் ஐஸ் போதைப் பொருளுடன் ஆயிரத்து 108 பேரும் கஞ்சாவுடன் ஆயிரத்து 26 பேரும் குஷ் போதைப்பொருளுடன் 22 பேரும் கஞ்சா செடிகளுடன் 27 பேரும் போதை மாத்திரைகளுடன் 68 பேரும், சட்டவிரோத சிகரட்களுடன் 6 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கைகளில் ஒரு கிலோ 368 கிராம் 456 மில்லிகிராம் ஹெரோயின், 02 கிலோ 656 கிராம் 363 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள், 326 கிலோ 398 கிராம் 592 மில்லி கிராம் கஞ்சா, 353 கிராம் 79 மில்லி கிராம் குஷ் போதைப் பொருள், 2 ஆயிரத்து 999 போதை மாத்திரைகள், 371 சட்டவிரோத சிகரட்கள், 41 ஆயிரத்து 907 கஞ்சா செடிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஒரு இலட்சம் கோடி ரூபாயை கடந்தது சுங்கத்தின் வருவாய்!

கொழும்பு, ஜூலை 05

சுங்கத் திணைக்களம் கடந்த 6 மாதங்களில் ஒரு இலட்சம் கோடி ரூபாய்க்கு மேல் வருமானத்தை ஈட்டியுள்ளது என்று அந்தத் திணைக்களத்தின் பேச்சாளர் சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு,"ஒரு இலட்சம் கோடி ரூபாய் வருமானமானது கடந்த 6 மாதங்களில் ஈட்டப்பட்டுள்ளது. அரசாங்கத்தால் எங்களுக்கு வழங்கப்பட்ட இந்த ஆண்டுக்கான வருவாய் இலக்கு 2 இலட்சத்து 11 ஆயிரத்து 500 கோடி ரூபாயாகும்.

"தற்போது பெறப்பட்ட வருவாயின் அடிப்படையில், இந்த இலக்கை தாண்டுவதற்கான வாய்ப்பு சுங்கத் திணைக்களத்துக்கு உள்ளது. இலங்கை சுங்கத் திணைக்களத்தால் செயல்படுத்தப்பட்ட வருவாய் வசூல் முறையின் மறுசீரமைப்பு இந்த வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது", என்றார். (ஐ)

# "ஜே.வி.பி. ஆட்சி 20 வருடங்கள் நீடித்திருக்கும்"

கொழும்பு, ஜூலை 05

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் 20 ஆண்டுகளுக்கு ஆட்சி நடத்தும் என்று கொழும்பு - கடுவலை நகர பிதா ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சியை கவிழ்க்க முடியாது. தற்போதைய ஆட்சியில் ஊழல், மோசடிகள், களவுகள் இடம்பெறுவதில்லை. இந்த விடயம் மக்களுக்கு நன்கு தெரியும்.

மின்சாரம் மற்றும் எரிபொருள் கட்டணங்கள் சிறிதளவில் அதிகரித்தாலும் மக்கள் அதனை மகிழ்ச்சியுடன் தாங்கிக் கொள்கின்றனர் என்று அவர் வழங்கிய செவ்வி ஒன்றில் கூறியுள்ளார்.

# குப்பை தொட்டியிலிருந்து வர்த்தகரின் சடலம் மீட்பு!

சிலாபம், ஜூலை 05

புத்தளத்தில் காணாமல் போன வர்த்தகர் ஒருவர் குப்பைத் தொட்டியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

நண்பர்களுடன் மது விருந்தில் ஏற்பட்ட வாக்குவாதத்தில் அவர் குத்திக் கொலை செய்யப்பட்டார் என்று பொலிஸாரின் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

புத்தளம் - வென்னப்புவ - மாரவில பகுதியை சேர்ந்த சிறீஜித்த ஜயசன் (வயது 31) என்பவர் கடந்த 30ஆம் திகதி மாரவில, கட்டுநேரிய பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய ஸ்ரீஜித் ஜயஷன் என்ற இந்த வர்த்தகரை கடந்த 30ஆம் திகதி முதல் காணவில்லை என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணையில் அவரின் நண்பரின் வீட்டில் வர்த்தகரின் மோட்டார் சைக்கிள் கண்டுபிடிக்கப்பட்டது. நண்பரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் வென்னப்புவ - சிரிகம்பொல பகுதியில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தின் குப்பைத் தொட்டியில் வர்த்தகரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

கடந்த 30ஆம் திகதி நண்பர்கள் இணைந்து மது அருந்தினர் என்றும் இதன்போது ஏற்பட்ட வாக்குவாதத்தில் வர்த்தகர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டார். இதன் பின்னர் அவரின் உடலை சந்தேகநபர்கள் குப்பை தொட்டியில் போட்டுச் சென்றுள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய சந்தேகநபர்களை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# 16 வயதான மகளையே வன்புணர்ந்தவர் கைது!

கொழும்பு, ஜூலை 05

தனது சொந்த மகளை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மொனராகலை - சியம்பரலாண்டுவ பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் 34 வயது நபரே கைதானார்.

16 வயது சிறுமியின் சந்தேகநபரின் மகள் தனக்கு நேர்ந்ததை பாடசாலையில் தனது ஆசிரியருக்குக் கூறியுள்ளார். இதையடுத்து, ஆசிரியர் பொலிஸாருக்கு அளித்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுமிக்கு இரு தங்கைகள் உள்ள நிலையில் தாயார் அவர்களை கைவிட்டுச் சென்றுவிட்டார். இந்த நிலையில் தந்தை மற்றும் சகோதரிகளுடன் பாதிக்கப்பட்ட சிறுமி வீட்டில் வசித்துள்ளார்.

வீட்டில் தனியாக இருந்த போது தந்தை பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்டார் என்று தனது ஆசிரியருக்கு சிறுமி கூறியுள்ளார். பாதிக்கப்பட்ட சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக மொனராகலை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்

# ரூ. 60 ஆயிரம் வாடகைக்கு வீடு எடுத்து கசிப்பு காய்ச்சிய நபர்!

கொழும்பு, ஜூலை 05

இரண்டு மாடி வீடு ஒன்றை மாதம் 60 ஆயிரம் ரூபாய் வாடகைக்கு பெற்று கசிப்பு காய்ச்சி விற்பனை செய்து வந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா - நீர்கொழும்பு - கட்டானை பகுதியிலேயே குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த வீடு முற்றுகையிடப்பட்டது. இதைத் தொடர்ந்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

விசாரணையில், குறித்த இரண்டு மாடி வீட்டை மாதாந்தம் 60 ஆயிரம் ரூபாய்க்கு வாடகைக்கு பெற்று சந்தேக நபர் கசிப்பு காய்ச்சி வந்துள்ளார் என்று தெரிய வந்துள்ளது. கைதான சந்தேகநபர் மீரிகம பகுதியை சேர்ந்தவராவார்.

சந்தேகநபரை கைது செய்தபோது 8 பீப்பாய்களில் கசிப்பு கைப்பற்றப்பட்டது. இதன் சந்தை மதிப்பு சுமார் 4 இலட்சம் ரூபாயாகும். அத்துடன், 3 எரிவாயு சிலிண்டர்களும் கைப்பற்றப்பட்டன.

# வாக்குமூலம் பெற அழைப்பது குறித்து சுற்றறிக்கை தயாரிப்பு

கொழும்பு, ஜூலை 05

முறைப்பாடு தொடர்பில் வாக்குமூலம் அளிக்க அழைக்கப்படும்போது, முறைப்பாட்டின் உள்ளடக்கம் தொடர்பில் குறித்த நபருக்கு எவ்வாறு அறிவிக்க வேண்டும் என்பதை குறிக்கும் சுற்றறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் இந்த சுற்றறிக்கையை அனுப்புவதற்கு பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய நடவடிக்கை எடுத்துள்ளார் என்று சட்ட மா அதிபர் நேற்று முன்தினம் உயர் நீதிமன்றத்துக்கு தெரிவித்தார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு எதிராக எரிசக்தி நிபுணரான விதுர ரூலபனாவ தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனு விசாரணைக்கு வந்தபோதே இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதியரசர்கள் அச்சல வெங்கப்புலி மற்றும் சம்பத் விஜயரத்ன ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன் இந்த மனு விசாரணைக்கு வந்தது. சமூக ஊடகம் ஒன்றில் தான் பதிவிட்ட ஒரு கருத்து தொடர்பாக வாக்குமூலம் ஒன்றை பெற விரும்புவதாகக் கூறி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரி ஒருவர் தொலைபேசியில் தன்னை அழைத்தார் என்று மனுதாரர் குறிப்பிட்டிருந்தார்.

இதன்போது தனக்கு எதிரான முறைப்பாடு என்ன? அதன் உள்ளடக்கம் என்ன என்று சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரியிடம் கேட்டாரெனவும் பிரதிவாதியான பொலிஸ் அதிகாரி அதற்கு பதிலளிக்க மறுத்துவிட்டார் என்றும் மனுதாரர் குற்றம் சுமத்தினார்.

பிரதிவாதியான பொலிஸ் அதிகாரி அத்தகைய தகவல்களை வழங்காமல் தனது அடிப்படை மனித உரிமைகளை மீறியுள்ளார் என்று தீர்ப்பளிக்கக் கோரி மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் மற்றும் கணினி குற்றப் பிரிவின் பிற அதிகாரிகள் நீதிமன்றத்தில் முற்பட்டபோது அளித்த உறுதிமொழியின்படி, தொடர்புடைய சுற்றறிக்கையை தயாரித்து நாடு முழுவதும் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு வழங்கியுள்ளதாக சட்டமா அதிபர் நீதிமன்றத்துக்குத் தெரிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பில் தான் திருப்தி அடைந்துள்ளதாகவும் மனுவின் விசாரணையை அதற்கேற்ப நிறைவு செய்ய முடியும் என்றும் மனுதாரரின் சட்டத்தரணி நீதிமன்றத்திற்குத் தெரிவித்தார். இதன்படி, மனுவின் விசாரணையை நிறைவு செய்ய உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவின் உப பரிசோதகர், அந்த பிரிவின் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பலர் பெயரிடப்பட்டிருந்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடை சட்டம் செப்ரெம்பரில் நீக்கப்படும்

## நீதி அமைச்சர் ஹர்சன நாணயக்கார

கொழும்பு, ஜுலை 05

**நாட்டில் 1979ஆம் ஆண்டு முதல் நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடைச் சட்டம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதமளவில் முழுமையாக நீக்கப்படும் என்று நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.**

தென்னிலைங்கையின் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். "1979ஆம் ஆண்டில் தற்காலிக ஏற்பாட்டு சட்டமாகவே பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. எனினும், அது இன்றளவிலும் நீடிக்கிறது.

இந்நிலையில், அந்தச் சட்டத்தை நீக்குவது தொடர்பில் ஆராய்வதற்காக குழுவொன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழு தற்போது அனைத்து கருத்துகள் - யோசனைகள் தொடர்பில் ஆராய்ந்து வருகின்றது. பொதுமக்களின் கருத்துகளும் கோரப்பட்டன.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதமளவில் பயங்கரவாதத் தடைச் சட்டம் முழுமையாக நீக்கப்படும்.

கருத்து சுதந்திரம், அரசியல் சுதந்திரம், அடையாளம் என்பவற்றை பாதுகாக்கும் வகையிலும் சர்வதேச நியமனங்களுக்கு அமையவும், மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாக்கும் வகையிலுமே புதிய சட்டத்தை இயற்ற எதிர்பார்க்கிறோம்.

பழைய பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் இருந்த விமர்சனங்கள் எல்லாம் நிவர்த்தி செய்யப்படும். அத்துடன், பூகோள பயங்கரவாதத்துக்கு முகங்கொடுப்பதற்குரிய சட்ட பாதுகாப்பு கவசமும் அவசியம். அதற்குரிய ஏற்பாடும் செய்யப்படும்." - என்றும் கூறினார். (ஐ)

# நடப்பு ஆண்டில் மட்டும் 62 துப்பாக்கிச்சூடுகள்!

## 34 பேர் உயிரிழந்தனர்

கொழும்பு, ஜுலை 05

நடப்பு ஆண்டில் இதுவரை நாட்டில் 62 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவங்களால் 34 பேர் உயிரிழந்தனர். 44 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பாதாள உலக கும்பல்களுக்கு இடையிலான மோதல்கள் காரணமாக இடம்பெற்றுள்ளன.

இதேசமயம், நேற்று (நேற்றுமுன்தினம்) மாத்திரம் நாட்டில் 3 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகின என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஆட்சிக்கு வந்த ஜே. வி. பி. செய்த மாற்றங்கள் என்ன?

## இப்படி கேட்கிறது சஜித் தரப்பு

கொழும்பு, ஜுலை 05

மக்கள் விடுதலை முன்னணியினர் (ஜே. வி. பி) ஆட்சிக்கு வந்து மேற்கொண்டுள்ள மாற்றம் என்ன? - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நடத்திய செய்தியாயளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார். அத்துடன், "நாட்டு மக்கள் வாழ்க்கையை கொண்டு நடத்துவதில் பல சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர். பொருட்களின் விலைகள் அதிகரித்துச் செல்கின்றன. எரிபொருள் விலையும் அதிகரித்துள்ளது. உலக சந்தையில் எரிபொருள் விலைக்கு இணங்கவே எம்முடைய நாட்டில் விலை சூத்திரம் அமைக்கப்படும். உலக சந்தையில் எரிபொருள் விலை குறைவடையும்போதும் நாட்டில் எரிபொருள் விலை அதிகரித்துள்ளது. அதற்கு காரணம் என்ன? இதுதான் அரசாங்கத்தின் விலை சூத்திரமா?

ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் இவ்வாறா கூறினர். அவர்கள் கூறிய விடயங்களை தற்போது நிறைவேற்றவில்லை. தாம் ஆட்சிக்கு வந்தவுடன் மின்சாரகட்டணம் குறைக்கப்படும் என்றனர். ஆனால், மின்கட்டணம் 100 இற்கு 15 சதவீதத்தால் அதிகரித்தது.

மக்கள் விடுதலை முன்னணியினர் ஆட்சிக்கு வந்து மேற்கொண்டுள்ள மாற்றம் என்ன? அரசாங்கம் ஐ. எம். எவ்வின் பின்னாலேயே பயணிக்கிறது. இதன் காரணமாக நாட்டின் பொருளாதாரத்திலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. கடனை மீள செலுத்தும் விடயத்திலும் சிக்கல் நிலவுகிறது. ஆகவே கொள்கை அடிப்படையிலான வேலைத் திட்டத்துக்கு செல்லுமாறு அரசாங்கத்தை கேட்டுக் கொள்கிறோம் - என்றார். (ஐ)

# பஸ்ஸிலிருந்து விழுந்த மாணவன் சாரதி, நடத்துநர்மீது நடவடிக்கை

கொழும்பு, ஜுலை 05

"சிசு சரிய" பாடசாலை பேருந்தின் மிதிபலகையில் நின்று பயணித்த மாணவன் ஒருவர் தவறி விழுந்து காயமடைந்தார்.

குருநாகல் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இது தொடர்பான காணொலிகள் வெளியாகியிருந்தன.

இந்த சம்பவத்துக்கு சாரதி, நடத்துநரின் கவனக்குறைவு, அலட்சியப் போக்கே காரணம் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் விசாரணை நடத்திய தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பேருந்தின் சாரதி, நடத்துநரை சேவையிலிருந்து தற்காலிகமாக நிறுத்தி வைக்க நடவடிக்கை எடுத்துள்ளது. (ஐ)

# நிதி முறைகேடு 6 அதிகாரிகள் கைதாகினர்!

கொழும்பு, ஜுலை 05

அபிவிருத்தி திட்டங்களுக்கு ஒதுக்கிய சுமார் 7 கோடி ரூபாய் நிதியில் முறைகேடு செய்தனர் என்ற குற்றச்சாட்டில் 6 அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி - எம்பிலிப்பிட்டிய விவசாய சங்கங்களை சேர்ந்த 6 அதிகாரிகளே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த, 2016 - 2018 காலப்பகுதியில் எம்பிலிப்பிட்டிய பிரதேச சபையால் 77 திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டன.

இவ்வாறு, அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களில் 15 திட்டங்கள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை என்பதை விசாரணையாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட அதிகாரிகளை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# சிறுமி வன்புணர்வு சந்தேகநபர் விடுதலை!

கொழும்பு, ஜுலை 05

வயது குறைந்த சிறுமியை பாலியல் வன்புணர்ந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவரை காலி மேல் நீதிமன்ற நீதிபதி பூர்ணிமா பரணகம விடுதலை செய்தார்.

குற்றஞ்சாட்டப்பட்டவரும் பாதிக்கப்பட்டவருமான தாங்கள் திருமணமானவர்கள் என்றும் ஒரு குழந்தையின் பெற்றோர் எனவும் பிரதிவாதி நீதிமன்றில் தெரிவித்தார்.

2020ஆம் ஆண்டு சம்பவம் நடந்தபோது பெண்ணுக்கு 14 வயது, ஆணுக்கு 17 வயதாகும். சம்பவம் தொடர்பிலான மேலதிக நடவடிக்கைகளை காலி - நெலுவ பொலிஸார் எடுத்தனர்.

இளம் பெண், தனது குழந்தையுடன் நீதிமன்றில் முற்பட்டார். குழந்தை அழத் தொடங்கியபோது, நீதிமன்றத்திலிருந்த ஓர் உறவினரிடம் குழந்தையை ஒப்படைத்து வாக்குமூலம் அளித்தார்.

குற்றஞ்சாட்டப்பட்டவர், தங்கள் திருமணச் சான்றிதழை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர். இதைத் தொடர்ந்து குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டார்.

# அஸ்வெசும திட்டம் மூலம் 18 இலட்சம் பேர் நன்மை!

கொழும்பு, ஜுலை 05

அஸ்வெசும திட்டத்தின் மூலம் 18 இலட்சம் மக்கள் பயனடைந்துள்ளனர் என்று கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் உபாலி பன்னிலகே தெரிவித்துள்ளார்.

அஸ்வெசும நலன்புரி திட்டத்தை பெறுவதற்காக மேலும் 9 இலட்சம் பேர் விண்ணப்பித்துள்ளனர் என்றும அவர் கூறினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் உபாலி பன்னிலகே இவற்றைத் தெரிவித்தார். (ஐ)

# ஆபிரிக்க பன்றி காய்ச்சலால் 67 ஆயிரம் பன்றிகள் பாதிப்பு

கொழும்பு, ஜுலை 05

ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல் காரணமாக நாட்டில் சுமார் 67 ஆயிரம் பன்றிகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆபிரிக்க பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து பன்றி இறைச்சி உள்ளிட்டவற்றை வேறு மாகாணங்களுக்கு கொண்டு செல்வதற்கு முற்றாக தடை விதித்தல் உள்ளிட்ட கட்டுப்பாடு நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என்று கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், மருத்துவர் ஹேமாலி கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

வடக்கு, மேல், ஊவா, வடமேல் மாகாணங்கள் உட்பட பல மாகாணங்களில் கடந்த ஆண்டு இந்த வைரஸ் தொற்று வேகமாகப் பரவியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆபிரிக்க பன்றிக்காய்ச்சல் பரவலை தடுக்க, பண்ணையாளர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் மருத்துவர் ஹேமாலி கோரியுள்ளார். (ஐ)

# உலக பாரம்பரிய சின்னத்திலிருந்து சிகிரியா நீக்கப்படும் அபாயத்தில்!

## புத்த சாசன அமைச்சர் சுனில் செனவி

கொழும்பு, ஜுலை 05

சிகிரியா, காலி கோட்டை ஆகியவற்றை அண்டிய பகுதிகளில் அதிகரித்து வரும் கட்டடங்களால் அவை உலக பாரம்பரிய சின்னங்களிலிருந்து நீக்கப்படும் அபாயம் எழுந்துள்ளது என்று புத்தசாசன மற்றும் சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நடந்த கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சிகிரியா, காலி கோட்டை ஆகியவற்றை அண்டிய பகுதிகளில் அதிகரித்து வரும் கட்டடங்களால் அவை உலக பாரம்பரிய சின்னங்களிலிருந்து அகற்றப்படும் அபாயம் எழுந்துள்ளது. முறையற்ற விதத்தில் கட்டடங்களை கட்டுவதற்கு கடந்த காலங்களில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது அப்பகுதிகளில் பெருமளவான மக்கள் வசித்து வருகின்றனர்.

மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள வரலாற்று சிறப்புமிக்க தளமான சிகிரியா இன்று வரை இலங்கையின் அதிசயங்களை உலகுக்குச் சொல்லும் சின்னமாக உள்ளது. எனினும், தற்போது சிகிரியாவை சுற்றி சுமார் 124 கட்டடங்கள் உள்ளன. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் யுனெஸ்கோ அமைப்பினருடன் நடந்த கலந்துரையாடலைத் தொடர்ந்து சிகிரியாவை அண்டிய பகுதிகளில் வசித்து வருபவர்களை வெளியேற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்காக 15 நிறுவனங்களை சேர்ந்த அதிகாரிகளை உள்ளடக்கிய விசேட குழு நியமக்கப்பட்டுள்ளதுடன், முறையான திட்டத்தைத் தயாரிப்பதன் மூலம் மக்களை அங்கிருந்து அகற்ற முடியும் என்ற நம்பிக்கை - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிராக்டர் கால்வாயில் விழுந்ததில் சிறுவன் பலி!

கொழும்பு, ஜூலை 05

வீதியை விட்டு விலகிய டிராக்டர் கால்வாயில் கவிழ்ந்த விபத்தில் சிறுவன் ஒருவர் உயிரிழந்தார். அதனை செலுத்தியவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த விபத்தில் சாரதியும் சிறுவனும் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். எனினும், சிறுவன் உயிரிழந்தார்.

அநுராதபுரம் - அளுத்திவுல்வெவ பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 17 வயது சிறுவனே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பேருந்து கவிழ்ந்ததில் 15 பயணிகள் காயம்!

கொழும்பு, ஜூலை 05

சாரதியின் கட்டுப்பாட்டை மீறிய பேருந்து கவிழ்ந்த விபத்தில் 15 பேர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை வத்தேகமவிலிருந்து கண்டி நோக்கி சென்ற இ. போ. ச. பேருந்தே குடுகல பகுதியில் கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானது.

காயமடைந்தவர்கள் வத்தேகம ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பேருந்து பயணித்துக் கொண்டிருந்தபோது, சாரதியின் இருக்கைக்கு அருகிலுள்ள கதவு திடீரெனத் திறபட்டதாகவும் அந்தக் கதவை சாரதி மீண்டும் மூட முற்பட்டபோதே இந்த விபத்து இடம்பெற்றதாகவும் முதல் கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

(ஐ)

# அரசாங்க நிதி மோசடி 3 அதிகாரிகள் கைது!

கொழும்பு, ஜூலை 05

ஊவா மாகாண சபையின் உதவி விவசாய பணிப்பாளர் உட்பட் இருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹல்துமுல்ல பகுதியிலுள்ள அரச காணியை கையகப்படுத்தி அங்கு நடுவதாகக்கூறி 4 ஆயிரம் மாங்கன்றுகளை அரச நிதியில் கொள்வனவு செய்து அவற்றை விற்பனை செய்தார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் மேலும் 2 அதிகாரிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வு திணைக்களத்தால் பொதுச் சொத்துகள் சட்டத்தின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

(ஐ)

# மாணவிக்கு ஆபாச படங்கள் அனுப்பி மிரட்டியவர் கைது!

கொழும்பு, ஜூலை 05

பல்கலைக்கழக மாணவிக்கு ஆபாச படங்களை அனுப்பி மிரட்டினார் என்று கூறப்படும் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமேற்கு மாகாண கணினி குற்றப் புலனாய்வு பிரிவு அதிகாரிகளால் சந்தேகநபர் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டார்.

குருநாகலை சேர்ந்த மாணவி, வடமேற்கு மாகாண கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அளித்த முறைப்பாட்டை தொடர்ந்து, குருநாகல் - மஹாவ பகுதியை சேர்ந்த 24 வயது இளைஞரே கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர், போலி பேஸ்புக் கணக்கை பயன்படுத்தி மாணவியின் பேஸ்புக் கணக்குக்கு ஆபாச படங்களை அனுப்பியதுடன், தன்னுடன் உறவு கொள்ளுமாறும் இல்லையேல் இவற்றை வெளியிடுவேன் என்றும் கூறி மிரட்டினார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# துட்டகைமுனு கால யானை தந்தங்கள் கதிர்காமத்தில் காட்சிப்படுத்தப்பட்டன

கொழும்பு, ஜூலை 05

மன்னர் எல்லாளனை தோற்கடிக்க துட்டகைமுனுவுக்கு உதவியதாகக் கூறப்படும் கடோல் யானையின் தந்தங்கள் வரலாற்று சிறப்புமிக்க கதிர்காம ஆலயத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னர் எல்லாளனுக்கு எதிராக துட்டகைமுனு போர் செய்தபோது விஜிதபுர கோட்டையை உடைப்பதற்கு கடோல் யானை உதவியதாக வரலாற்று நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போர் வெற்றிக்குப் பிறகு கதிர்காமத்தில் நடந்த முதல் எசல விழாவில் குறித்த யானையால் தெய்வ சிலை சுமந்து செல்லப்பட்டது. மன்னர் துட்டகைமுனுவின் மரணத்துக்குப் பின்னர் அந்த யானை மாகமத்துக்கு சென்றுக்கொண்டிருந்தபோது வழியில் உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது.

போரமெடில்ல என்ற இடத்தில் யானை அடக்கம் செய்யப்பட்டு, பின்னர், அரச உத்தரவின் பேரில், குறித்த யானையின் தந்தங்கள் கதிர்காம ஆலயத்துக்கு காணிக்கையாக வழங்கப்பட்டன. இந்தத் தந்தங்களே தற்போது ஆலயத்தின் வாயிலின் இரு புறமும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (ஐ)

# தொடரும் துப்பாக்கிச்சூடுகள் சஞ்சீவவின் சகாவும் கொலை!

கொழும்பு, ஜூலை 05


**நீதிமன்றில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட பாதாள உலகக் குழு ஒன்றின் தலைவர் கனேமுல்லை சஞ்சீவவின் நெருங்கிய சகாவும் சுட்டுக் கொல்லப்பட்டார்.**

ராகமை - படுவத்தை பகுதியில் வைத்தே இவர் சுட்டுக் கொல்லப்பட்டார். நேற்றுமுன்தினம் கம்பஹாவில் இடம்பெற்ற மூன்றாவது துப்பாக்கிச்சூட்டு சம்பவம் இதுவாகும்.

முச்சக்கர வண்டியில் பயணித்த அடையாளம் காணப்படாத இருவர் இந்தத் துப்பாக்கிச்சூட்டை நடத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். இதில், பாதாள உலக குழுவை சேர்ந்த "ஆர்மி உபுல்" என்று அழைக்கப்படுபவரே உயிரிழந்தார்.

இவர், புதுக்கடை நீதிவான் நீதிமன்றில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட பாதாள உலகக் குழுவின் தலைவரான கனேமுல்லை சஞ்சீவவின் நெருங்கிய நண்பர் என்று கூறப்படுகிறது.

இதேசமயம், நேற்றுமுன்தினம் கம்பஹாவில் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற இரு துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களில் ஒருவர் உயிரிழந்தார். இருவர் காயமடைந்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



கதிர்காமம் ஆலய பெருந்திருவிழாவின் ஏழாம்நாளில் கரகம் ஏந்தி ஆடும் பெண் ஒருவர்...!

## சடலம் மீட்பு

சிலாபம், ஜூலை 05

புத்தளம் - லுணுவில பிரதேசத்தில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த புதன்கிழமை மீட்கப்பட்ட இந்த சடலத்துக்கு உரியவர் தொடர்பில் நேற்று வரை எந்த தகவல்களும் கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## யானை தாக்கி ஒருவர் மரணம்!

கொழும்பு, ஜூலை 05

காட்டுயானை தாக்கியதில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

அநுராதபுரம் - தம்புத்தேக - மலியதேவபுர பகுதியைச் சேர்ந்த 68 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

முதியவர் நேற்று முன்தினம் அதிகாலை தனது நிலத்தில் யானைகள் புகாமல் அமைக்கப் பட்டிருந்த மின் வேலியின் மின் சாரத்தை துண்டிக்கச் சென்ற போதே யானையால் தாக்கப் பட்டு உயிரிழந்தார். (ஐ)

# தாயாரை கொன்று, குழந்தையை வீதியில் விட்டுச்சென்றவருக்கு மரண தண்டனை!

கொழும்பு, ஜூலை 05

சொத்துத் தகராறில் பெண்ணை கொன்றுவிட்டு அவரின் 2 வயது மகளை வீதியில் விட்டுச் சென்ற 52 வயது நபருக்கு அம்பாந்தோட்டை மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

ரம்புக்கனை, கீர்த்தி சிறீ ராஜசிங்க மாவத்தை, எண். 60ஃஏ இல் வசிக்கும் யக்கலகே லசித் வசந்த குமார என்ற குற்றவாளி, இரத்தினபுரியில் உள்ள நிவிதிகலையை சேர்ந்த நிலானி விஜதுங்கவை கொலை செய்தார் என்பது குற்றங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டது.

நீதிமன்ற நடவடிக்கைகளின் படி,குற்றவாளியும் பாதிக்கப்பட்டவரும் ஒரு பத்திரிகையில் வெளியான திருமண முன்மொழிவு விளம்பரம் மூலம் சந்தித்து உறவை வளர்த்துக் கொண்டனர்.

அப்போது, அந்தப் பெண்ணுக்கு முந்தைய திருமணத்திலிருந்து ஒரு மகள் இருந்தார். இந்த ஜோடி சிறிது காலம் ஒன்றாக வாழ்ந்தனர். இந்த நிலையில், அந்தப் பெண்ணுக்கு சொந்தமான சொத்து தொடர்பாக தகராறுகள் எழுந்தன. தகராறில் ஈடுபட்ட குற்றஞ்சாட்டப்பட்டவர் அந்தப் பெண்ணைக் கொலை செய்துவிட்டு அதிகாலையில் அவரது 2 வயது மகளை ரக்வானை அருகே வீதியில் விட்டுச்சென்றார்.

அதிகாலை 4 மணியளவில், கொழும்பிலிருந்து கல்முனை நோக்கிச் சென்ற பேருந்தின் சாரதி ரக்வானை 10ஆவது வளைவுக்கு அருகில் குழந்தையைக் கண்டார். சாரதி பேருந்தை நிறுத்தி, பயந்துபோயிருந்த குழந்தையை ஏற்றிச் சென்றார். குழந்தையால் தனது பெற்றோர் அல்லது வசிக்கும் இடம் குறித்து எந்த தகவலை வழங்க முடியவில்லை.

சாரதி குழந்தையை இரத்தினபுரி பொலிஸாரிடம் ஒப்படைத்தார். அவர்களின் ஆரம்ப விசாரணைகள் சந்தேக நபரை அடையாளம் காண உதவின. விசாரணையின்போது, குற்றஞ்சாட்டப்பட்டவர் திஸ்ஸமஹாராமையின் பன்னேகமுவ பகுதியில் பெண்ணைக் கொன்று ஒரு குழியில் உடலை வீசினார் என்றும் பின்னர் குழந்தையை கைவிட்டு சென்றார் எனவும் கூறினார். இந்த வாக்குமூலத்தின் அடிப்படையில், இரத்தினபுரி பொலிஸார் திஸ்ஸமஹாராமை பொலிஸாருக்கு தகவல் அளித்தனர். இதன்பின்னர், சந்தேக நபரின் வழிகாட்டுதலில், பொலிஸார் குழியிலிருந்து பெண்ணின் துண்டிக்கப்பட்ட தலை மட்டும் மீட்கப்பட்டது.

முதல்கட்ட விசாரணைகளுக்கு பிறகு, நவம்பர் 11, 2021 அன்று சட்டமா அதிபர் அம்பாந்தோட்டை மேல் நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக 2 குற்றப்பத்திரிகைகளை தாக்கல் செய்தார்.

நீண்ட விசாரணைக்குப் பிறகு, அரசு தரப்பு 2 குற்றச்சாட்டுகளையும் நியாயமான சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபித்தது. இதையடுத்து, நீதிபதி குற்றவாளிக்கு மரண தண்டனை விதித்து, தண்டனை நிறைவேற்றப்படும் வரை அவரை வெலிக்கடை சிறையில் அடைக்க உத்தரவிட்டார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 401 இடங்களில் டெங்கு பரிசோதனை 41 இடங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை!

மட்டக்களப்பு, ஜூலை 05

**மட்டக்களப்பில் 401 இடங்களில் டெங்கு ஒழிப்பு பரிசோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதுடன் 41 இடங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.**

சுகாதார அமைச்சு பிரகடனப்படுத்தியுள்ள தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நேற்று முன்தினம் காலை திடீர் டெங்கு சோதனை நடத்தப்பட்டது. அங்கு 401 இடங்களில் நடத்தப்பட்ட சோதனைகளில் 41 இடங்களில் டெங்கு நுளம்புகள் கண்டுபிடிக்கப்பட்டு, சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி உதயகுமார் தெரிவித்தார்.

விமானப்படையினர், பொலிஸார், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஊழியர்கள், பொது சுகாதார பரிசோதர்கள், பிராந்திய சுகாதார பணிமனை ஊழியர்கள் இணைந்து இந்த டெங்கு ஒழிப்பு சோதனையை மேற்கொண்டனர்.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பிரிவுக்குள் அடங்கும் கோட்டைமுனை, புளியந்தீவு ஆகிய பகுதிகளில் இந்த டெங்கு ஒழிப்பு பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

பத்து பிரிவுகளாக பிரிக்கப்பட்டு இந்த சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் வீடுகள், பாடசாலைகள், மதத்தலங்கள் உட்பட 401 இடங்களில் பரிசோதனை செய்யப்பட்டன. இதில் 41 இடங்களில் டெங்கு குடம்பிகள் சுகாதார அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டதாக சுகாதார வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார். (எ)

# கடலரிப்பு அபாயம் அதிகரிப்பு தீர்வுகாண உடனடி நடவடிக்கை

கல்முனை, ஜூலை 05

கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் மற்றும் கடற்கரைப்பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் வேண்டுகோளுக்கமைய அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம கல்முனை கடற்கரைப்பகுதியில் ஏற்படும் கடலரிப்பு அபாயம் உள்ள இடங்களை கடந்த புதன்கிழமை பார்வையிட்டு உடனடி தீர்வு வழங்கினார்.

இதன்போது, அரசாங்க அதிபருடன் கரையோர பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள், கல்முனை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் கடற்கரை பாதுகாப்பு கல்லணை திட்ட தரப்பினர் கலந்துகொண்டனர். இதில், நம்பிக்கையாளர் சபையினருடன் பிரதேச மீனவர்களும் இணைந்து கடலரிப்பு அபாயம் தொடர்பான கள நிலைமைகளை விளக்கினர்.

நிலைமையை ஆய்வு செய்த மாவட்ட அரசாங்க அதிபர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், இடைநிறுத்தப்பட்ட திட்ட வேலைகளை உடனடியாக ஆரம்பித்து இரண்டு வாரங்களுக்குள் முடிக்க உத்தரவுகள் வழங்கினார்.

இதன்பிரகாரம் கடலோர பாதுகாப்பு கல்லணை திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்படுவதற்கான உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது. (எ-01)

# மருத்துவமனைக்கு உதவி



திருகோணமலை, ஜூலை 05

திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பிரதேச மருத்துவமனையின் மகளிர் பிரிவு தொகுதிக்கான ஒரு தொகை பொருட்கள் கையளிக்கப்பட்டன.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ. சிறீபதி தலைமையில் நேற்று குறித்த நிகழ்வு நடைபெற்றது. இதன்போது 2 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் திருகோணமலையில் இயங்கி வரும் ஈவினிங்ஸ் நிறுவனம் ஊடாக வழங்கப்பட்டன. இதன்போது கட்டிலுக்கான மெத்தை, கதிரைகள் உள்ளிட்ட பொருட்கள் வழங்கப்பட்டன.

தம்பலகாமம் பிரதேச செயலக மகளிர் சிறுவர் பிரிவு உத்தியோகத்தர்களான நஸ்ரின் திலானி, கே. பாமினி உட்பட குறித்த நிறுவனத்தின் பணிப்பாளர் காயத்திரி நளினகாந்தன், மருத்துவர்கள், தாதியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)





# ஆரோக்கிய வாழ்வுக்கான நடைபவனி, கண்காட்சி

திருகோணமலை, ஜூலை 05

திருகோணமலை - செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயம், உப்புவெளி பட்டனமும் சூழலும் பொது வைத்திய சுகாதார அதிகாரி அலுவலகம் இணைந்து போஷாக்கு மாதத்தை முன்னிட்டு நேற்று நடைபவனி மற்றும் ஆரோக்கிய வாழ்வுக்கான போஷாக்குணவு என்னும் தொனிப்பொருளில் கண்காட்சி செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலய பாடசாலையில் அதன் அதிபர் மற்றும் உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி சயலொலிபவன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது பாடசாலை மாணவர்கள் பழங்கள் மற்றும் மரக்கறி வகைகள் போன்ற நஞ்சற்ற உணவு வகைகளை கண்காட்சி படுத்தியதுடன், தானியங்கள் சார்ந்த உணவுப் பொருட்களையும் காட்சிப்படுத்தினர். மாணவர்கள் வருகை தந்த விருந்தினர்களுக்கு போஷாக்கு உணவு தொடர்பான விளக்கத்தையும் தெளிவுபடுத்தினர். இந்த நிகழ்வில் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் தவிசாளர் வெள்ளத்தம்பி சுரேஷ் மற்றும் உப்புவெளி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, திருகோணமலை மாவட்ட தாய் சேய் பிராந்திய வைத்தியர் அதிகாரி இ. செந்தூரன் மற்றும் பொது சுகாதார அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-04)

# "மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு அரசாங்கம் ஊக்கப்படுத்த வேண்டும்"

கல்முனை, ஜூலை 05

மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு அரசாங்கம் ஊக்கப்படுத்த வேண்டும். ஓர் அரசுக்கான கடப்பாடு மனித உரிமை பாதுகாவலர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதே என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தெரிவித்தார்.


மனித உரிமை மீறல்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல், மீறல்களை ஆவணப்படுத்தல், இதனை ஆதரித்து குரல் எழுப்புதல் போன்றவை மனித உரிமை பாதுகாவலர்களின் முக்கிய பணியாக இருக்கின்றது. இதைத் தான் ஊடகங்கள் செய்து வருகின்றன என்றும் அவர் கூறினார்.

ஊடகவியலாளர்கள் மனித உரிமைகளை பேணுகின்ற சிறந்த அந்தஸ்தை பெறுபவர்களாக இருக்கின்றார்கள். ஒரு நாட்டில்



நடைபெறுகின்ற சம்பவங்கள் ஒரு தனி மனிதனுக்கு ஏற்பட்ட சம்பவங்கள், ஒரு சமூகத்துக்கு ஏற்படுகின்ற அசம்பாவிதங்கள் அல்லது அரசியல் ரீதியான மாற்றங்கள் பொதுமக்களின் கருத்துக்களை வெளியிடுபவர்கள் தான் ஊடகவியலாளர்கள். கருத்து வெளியிடும் சுதந்திரத்தை இல்லாமல் செய்ய முனைப்புடன் செயல்பட்டவர்கள் மனித உரிமைகளை மீறியவர்களாவர். கொலை செய்யும் மிரட்டும் காணாமல் போகச் செய்யும் இருக்கின்ற விடயங்கள் மனித உரிமை பாதுகாவலர்களுக்கு செய்கின்ற ஒரு அநியாயமாகும். கடந்த காலங்களில் இடம்பெற்ற ஓர் ஒடுக்கு முறை என்றே இதை கூற முடியும். ஊடக சுதந்திரம் என்பது மக்களுக்கு பொதுவாக இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச சித்திரவதைகளுக்கெதிரான தினத்தையொட்டி கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் பொலிஸ் மற்றும் அரச, அரசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு கடந்த முதலாம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தலைமையில் கல்முனையில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)



# உள்நாட்டுத் துப்பாக்கியுடன் திருமலையில் ஒருவர் கைது

திருகோணமலை, ஜூலை 05

திருகோணமலை, அக்போபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மூன்று உள்நாட்டுத் துப்பாக்கிகளுடன் சந்தேக நபர் ஒருவர் புதன்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அக்போபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் அக்போபுரம் பகுதியைச் சேர்ந்த 54 வயதுடையவர் ஆவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காஸாவில் இஸ்ரேல் இராணுவம் மீண்டும் கொடூரத் தாக்குதல்!

## 94 பேர் உயிரிழப்பு, முகாம்கள் சேதம்

காஸா, ஜூலை 05

**காஸாவில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய கொடூரத் தாக்குதலில் நிவாரண உதவி பெற காத்திருந்தவர்கள் உட்பட 94 பேர் உயிரிழந்தனர்.**

காஸா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாதத் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 1139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலிலிருந்து 251 பேரை பணயக் கைதிகளாக காஸா முனைக்கு ஹமாஸ் அமைப்பினர் கடத்திச் சென்றனர்.

இதையடுத்து, ஹமாஸ் அமைப்பு மீது போர் அறிவித்த இஸ்ரேல், காஸா முனையில் அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது. இதுவரை காஸாவில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் சுமார் 57 ஆயிரம் பலஸ்தீனியர்கள் உயிரிழந்ததாக காஸா சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. ஹமாஸ் அமைப்பினரை முழுமையாக அழிக்கும் வரை போர் நிறுத்தம் ஏற்படாது என இஸ்ரேல் அரசு உறுதியாக தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஹமாஸ் அமைப்பினரிடம் உள்ள பணயக் கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும், இராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டுள்ளது.

இதற்கிடையில் உணவுப் பொருட்கள் தட்டுப்பாடு காரணமாக காஸாவில் மிக மோசமான நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. காஸா மக்களுக்காக அனுப்பி வைக்கப்பட்ட உணவுப் பொருட்களை சுமார் இரண்டரை மாதங்களாக இஸ்ரேல் இராணுவம் நிறுத்தி வைத்துள்ளது. மே மாதம் முதல் மிகச் சிறிய அளவில் மட்டுமே காஸாவுக்குள் உணவுப்பொருட்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றன.

இந்தச் சூழலில், காஸா மீது இஸ்ரேல் இராணுவம் மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளது. காஸாவின் பல்வேறு பகுதிகளில் உள்ள முகாம்கள், குடியிருப்பு கட்டடங்கள் உள்ளிட்ட இடங்களில் நடந்த வான்வழித் தாக்குதல்களில் 94 பேர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. இதில் சுமார் 45 பேர் நிவாரண உதவிக்காக காத்திருந்தபோது தாக்குதலில் சிக்கி உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)



# இமாச்சலில் கனமழையால் உயிரிழப்பு 13 ஆக உயர்வு

சிம்லா, ஜூலை 05

இந்தியாவின் இமாச்சலபிரதேசம், மண்டி மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் கடந்த செவ்வாய்க்கிழமை 10 மேகவெடிப்புகள், 3 திடீர் வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள் ஏற்பட்டன. இதைத் தொடர்ந்து கோஹர், துனாக், கர்சோக் ஆகிய பகுதிகளிலிருந்து 11 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன.

இந்த நிலையில் மேலும் இருவரின் உடல்கள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து உயிரிழப்பு 13 ஆக அதிகரித்தது. (எ)

# அமெரிக்காவில் இரவு நேர விடுதியில் துப்பாக்கிச்சூடு

## நால்வர் பலி, 14 பேர் காயம்

சிக்காக்கோ, ஜூலை 05

அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் ரிவர் நார்த் பகுதியில் இரவு நேர களியாட்ட விடுதி ஒன்றுக்கு வெளியே திரண்டிருந்த மக்களை நோக்கி கடந்த புதன்கிழமை இரவு சிலர் திடீரென துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

வாகனத்தில் வந்து துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர்கள் அங்கிருந்து உடனடியாக தப்பிச் சென்றனர். இதனைத் தொடர்ந்து வீதியெல்லாம் அழுகுரலாகவும், இரத்தம் வழிந்தோட மக்கள் அலறியபடியும் நாலாபுறமும் ஓடிச் சென்றனர்.

இந்தச் சம்பவத்தில் 2 பெண்களும் 2 ஆண்களுமாக 4 பேர் உயிரிழந்ததோடு, 14 பேர் காயமடைந்துள்ளனர். அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

# இந்தியாவில் ஜனநாயகம் வெறும் அமைப்பு அல்ல

## கானா பாராளுமன்றத்தில் இந்திய பிரதமர் மோடி உரை

அக்ரா, ஜூலை 05

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உருவாக்கப்பட்ட உலக ஒழுங்கு வேகமாக மாறி வருகிறது என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார். மேலும், இந்தியாவில் ஜனநாயகம் என்பது வெறும் ஓர் அமைப்பு அல்ல. அது நமது அடிப்படை மதிப்புகளின் ஒரு பகுதி என்றும் அவர் குறிப்பிட்டார்.

இரண்டு நாள் பயணமாக நேற்று முன்தினம் கானா சென்ற பிரதமர் மோடி அந்த நாட்டு பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்தினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், இந்தியாவைப் பொறுத்தவரை, ஜனநாயகம் என்பது வெறும் ஓர் அமைப்பு அல்ல. அது நமது அடிப்படை மதிப்புகளின் ஒரு பகுதி. உலகின் பழமையான வேதங்களில் ஒன்றான ரிக் வேதம், 'எல்லா திசைகளிலிருந்தும் நல்ல எண்ணங்கள் நமக்கு வரட்டும்'என்று கூறுகிறது. பல்வேறு கருத்துக்களை வெளிப்படையான முறையில் நோக்கும் தன்மைதான் ஜனநாயகத்தின் மையக்கரு- என்றார். (எ)



# தலாய் லாமாவை வேறு யாரும் தீர்மானிக்க முடியாது- இந்தியா

புதுடில்லி, ஜூலை 05

"அடுத்த தலாய் லாமா குறித்த முடிவை எடுக்கும் உரிமை என்பது தற்போதைய பௌத்த மதத் தலைவரான தலாய் லாமா மற்றும் தலாய் லாமாவின் 'காடன் போட்ராங் அறக்கட்டளை' தவிர்த்து வேறு யாருக்கும் இல்லை"- என்று இந்தியாவின் சிறுபான்மை விவகார அமைச்சர் கிரண் ரிஜிஜூ தெரிவித்தார்.

புதுடில்லியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கருத்து கூறும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், "அடுத்த தலாய் லாமா யார் என்பதை முடிவு செய்யும் விவகாரத்தைப் பொறுத்தவரை, அதற்காக நிறுவப்பட்டுள்ள அமைப்பு மற்றும் தலாய் லாமாவின் விருப்பம் ஆகியவற்றின்படியே தீர்மானிக்கப்பட வேண்டும் என்றே தலாய் லாமாவைப் பின்பற்றும் அனைவரும் நினைக்கிறார்கள். தலாய் லாமாவையும், நடைமுறையும் தவிர வேறு யாருக்கும் அதைத் தீர்மானிக்கும் உரிமை இல்லை"-என்று தெரிவித்தார்.

# இனப்படுகொலைக்கு இஸ்ரேலே காரணம்!

## ஐ. நா விசேட அறிக்கையாளர்

ஜெனிவா, ஜூலை 05

நவீன வரலாற்றில் மிகவும் ஈவிரக்கமற்ற இனப்படுகொலைக்கு இஸ்ரேலே காரணம் என்று ஐ. நாவின் விசேட அறிக்கையாளர் பிரான்செஸ்கா அல்பெனிஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

காஸா நிலவரம் தொடர்பில் உலக நாடுகள் இஸ்ரேலுடனான வர்த்தக தொடர்புகளை துண்டிக்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் தனது அறிக்கையை வெளியிட்டு உரையாற்றிய, ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பலஸ்தீன பகுதிகளுக்கான ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் பிரான்செஸ்கா, ஈவிரக்கமற்ற இனப்படுகொலைக்கு இஸ்ரேல் காரணம் எனவும் கூறினார்.

ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனத்தில் நிலைமை ஊழிக்காலம் போன்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். ஐ. நா. மனித உரிமைகள் பேரவை உறுப்பினர்கள் அவரது உரைக்கு கைதட்டி பாராட்டை வெளியிட்டுள்ளனர். (எ)

# இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு அமெரிக்கா 500 சதவீதம் வரி

## பாராளுமன்றத்தில் புதிய சட்ட திருத்தம்

வாஷிங்டன், ஜூலை 05

ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கும் இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு 500 சதவீதம் வரி விதிக்கும் சட்ட திருத்தம் அமெரிக்க பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

உக்ரைன் - ரஷ்யா இடையிலான மோதலை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு உலக நாடுகள் முயற்சி செய்து வருகின்றன. இதனிடையே, அமைதி பேச்சுவார்த்தைக்கு ரஷ்யா உடன்படவில்லை என்றால் ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் வாங்கும் நாடுகளுக்கு 500 சதவீத வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க அரசு அறிவித்தது.

இதனிடையே ரஷ்யாவிடம் இருந்து இந்தியா பெருமளவில் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்து வருகிறது. இந்த நிலையில் ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வர்த்தகம் செய்யும் நாடுகளுக்கு 500 சதவீதம் வரி விதிக்க வகை செய்யும் சட்ட திருத்தம் ஒன்றை அமெரிக்க பாராளுமன்றத்தில் லிண்ட்சே கிரகாம் எம்.பி. தாக்கல் செய்தார்.

இது இந்தியாவுக்கு மிகப்பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இது குறித்து அமெரிக்காவில் இந்திய மத்திய அரசு கவலை தெரிவித்திருப்பதாக வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் கூறியுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் இங்கிலாந்து அணி தடுமாற்றம்

பர்மிங்காம், ஜூலை 05


இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி தடுமாறி வருகிறது.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி பர்மிங்காமில் நடைபெற்று வருகிறது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 310 ஓட்டங்கள் அடித்திருந்தது. இந்தச் சூழலில் 2ஆவது நாள் ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சுப்மன் கில் - ரவீந்திர ஜடேஜா ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இந்த ஜோடி 204 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்த நிலையில் பிரிந்தது. ஜடேஜா 89 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அடுத்து சுப்மன் கில்லுடன் வாஷிங்டன் சுந்தர் கைகோர்த்தார். சுந்தரின் ஒத்துழைப்புடன் இரட்டை சதத்தை கடந்த சுப்மன் கில் தொடர்ந்து துடுப்பாட்டம் செய்தார். வாஷிங்டன் சுந்தர் பொறுமையாக விளையாடி 103 பந்துகளில் 42 ஓட்டங்கள் அடித்த நிலையில் ஆட்டமிழந்தார். இதனிடையே சுப்மன் கில் 250 ஓட்டங்கள் அடித்தார். சுந்தர் ஆட்டமிழந்த சிறிது நேரத்திலேயே சுப்மன் கில்லும் 269 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இந்திய அணியின் தலைவர் அடித்த அதிகபட்ச ஓட்டம் இதுவாகும்.

பின்னர் களமிறங்கிய ஆகாஷ் தீப் 6 ஓட்டங்களிலும், சிறிது நேரம் தாக்குப்பிடித்த முகமது சிராஜ் 8 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். முடிவில் 151 ஓவர்கள் விளையாடிய இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 587 ஓட்டங்கள் குவித்த நிலையில் சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. இங்கிலாந்து தரப்பில் ஷோயப் பஷீர் 3 விக்கெட்களும், கிறிஸ் வோக்ஸ், ஜோஷ் டங் மற்றும் தலா 2 விக்கெட்களும் வீழ்த்தினர்.



இதனையடுத்து தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது. பென் டக்கெட்(0), போப்(0), கிராலி(19) அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இதனால் அந்த அணி 24 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை இழந்து தடுமாறியது. இதையடுத்து ரூட் - புரூக் ஜோடி அணியை சரிவிலிருந்து மீட்கும் பணியில் ஈடுபட்டது. 2ஆம் நாள் ஆட்டமுடிவில் இங்கிலாந்து 20 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 77 ஓட்டங்கள் எடுத்துள்ளது. ரூட் 18 ஓட்டங்களுடனும் புரூக் 30 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இந்திய தரப்பில் ஆகாஷ்தீப் 2 விக்கெட்களை கைப்பற்றினார்.

(எ)

# கில் மாபெரும் சாதனை

பர்மிங்காம், ஜூலை 05

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் சுப்மன் கில் 269 ஓட்டங்கள் அடித்தார். இதன் மூலம் சுனில் கவாஸ்கரின் மாபெரும் சாதனையை சுப்மன் கில் முறியடித்துள்ளார்.


இந்தியா - இங்கிலாந்து இடையிலான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் 2ஆவது போட்டி பர்மிங்காமில் நடைபெற்று வருகிறது.

இதில், 269 ஓட்டங்கள் அடித்த சுப்மன் கில் இங்கிலாந்து மண்ணில் அதிகபட்ச ஓட்டங்கள் அடித்த இந்திய வீரர் என்ற வரலாற்று சாதனையை படைத்துள்ளார். இதற்கு முன்னர் 1979ஆம் ஆண்டு சுனில் கவாஸ்கர் 221 ஓட்டங்கள் அடித்திருந்ததே சாதனையாக இருந்தது. தற்போது சுனில் கவாஸ்கரின் அந்த மாபெரும் சாதனையை முறியடித்துள்ள சுப்மன் கில் புதிய சாதனை படைத்துள்ளார். (எ)



# கிராண்ட் செஸ் தொடரில் குகேஷ் அசத்தல் ஆட்டம்

## மீண்டும் கார்ல்சனை வீழ்த்தினார்




ஜாக்ரெப், ஜூலை 05

கிராண்ட் செஸ் தொடரில் கார்ல்சனை மீண்டும் வீழ்த்தி குகேஷ் வெற்றி பெற்றார்.

கிராண்ட் செஸ் தொடரின் 10ஆவது சீசன் (மொத்தம் 5 தொடர்) தற்போது நடைபெற்று வருகிறது. இதன் மூன்றாவது தொடர் குரோஷியாவில் நடைபெற்று வருகிறது. இதில் இந்தியாவின் குகேஷ், பிரக்ஞானந்தா, நோர்வேயின் மாக்னஸ் கார்ல்சன் உட்பட 10 பேர் பங்கேற்றுள்ளனர்.

இந்தத் தொடரில் ரேபிட் - பிளிட்ஸ் 2025 போட்டியின் ஆறாவது சுற்றில், உலக சம்பியன் டி. குகேஷ், உலகின் நம்பர் 1 வீரரான மேக்னஸ் கார்ல்சனை சந்தித்தார். இந்தப் போட்டியில் அபாரமாக செயல்பட்ட குகேஷ் கார்ல்சனை வீழ்த்தினார். இந்த வெற்றி, குகேஷின் ஐந்தாவது தொடர் வெற்றியாகும், மேலும் அவர் 10 புள்ளிகளுடன் தனித்து முன்னிலை வகிக்கிறார்.

நோர்வே செஸ்- 2025 போட்டியில் கார்ல்சனை முதன் முறையாக வீழ்த்தியதைத் தொடர்ந்து, இந்த ரேபிட் வடிவ போட்டியில் குகேஷ் மீண்டும் கார்ல்சனை வீழ்த்தியுள்ளார். இந்தப் போட்டிக்கு முன்னர் பேட்டியளித்த கார்ல்சன் , "ரேபிட் மற்றும் பிளிட்ஸ் வடிவங்களில் குகேஷ் பலவீனமான வீரர்" என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால், குகேஷ் தனது திறமையால் அதற்குப் பதிலடி கொடுத்துள்ளார். (எ)



# விம்பிள்டன் ரென்னிஸ் ரொமி போல் தோல்வி

லண்டன், ஜூலை 05

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் ரொமி போல் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

"கிராண்ட்ஸ்லாம்" போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் லண்டனில் நடைபெற்று வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் அமெரிக்காவின் முன்னணி வீரரான ரொமி போல், ஆஸ்திரியாவின் செபஸ்ரியன் ஆப்னர் உடன் மோதினார்.

இந்தப் போட்டியின் முதல் செற்றை 6-1 என்ற புள்ளிக் கணக்கில் ரொமி போல் கைப்பற்றினார். தொடர்ந்து நடைபெற்ற அடுத்தடுத்த செற்களில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய செபஸ்ரியன் ஆப்னர் 7-5, 6-4, 7-5 என்ற செற் கணக்கில் ரொமி போலை வீழ்த்தினார்.

அபாரமாக செயல்பட்டு வெற்றி பெற்ற செபஸ்ரியன் ஆப்னர் அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். அதிர்ச்சி தோல்வி கண்ட அனுபவ வீரரான ரொமி போல் தொடரிலிருந்து வெளியேறினார். (எ)

# விம்பிள்டன் ரென்னிஸ் ஸ்வியாடெக் வெற்றி


லண்டன், ஜூலை 05

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் இகா ஸ்வியாடெக் 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

"கிராண்ட்ஸ்லாம்" போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் போலந்தின் முன்னணி வீராங்கனையான இகா ஸ்வியாடெக், அமெரிக்காவின் கேட்டி மெக்னலி உடன் மோதினார்.

இந்தப் போட்டியின் முதல் செற்றை 5-7 என்ற புள்ளிக்கணக்கில் இகா ஸ்வியாடெக் இழந்தார். தொடர்ந்து நடைபெற்ற அடுத்த இரு செற்களில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய ஸ்வியாடெக் 6-1, 6-1 என்ற புள்ளிக் கணக்கில் கேட்டி மெக்னலியை வீழ்த்தி வெற்றி பெற்றார்.

இந்த வெற்றியின் மூலம் இகா ஸ்வியாடெக் 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். தோல்வி கண்ட கேட்டி மெக்னலி தொடரிலிருந்து வெளியேறினார். (எ)



# விம்பிள்டன் ரென்னிஸின் 3ஆவது சுற்றில் ஜோகோவிச்

லண்டன், ஜூலை 05

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் 3ஆவது சுற்றுக்கு ஜோகோவிச் முன்னேறியுள்ளார்.

"கிராண்ட்ஸ்லாம்" போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் செர்பியாவின் முன்னணி வீரரான நோவக் ஜோகோவிச், பிரிட்டனின் டேன் எவான்ஸ் உடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஜோகோவிச் 6-3, 6-2, 6-0 என்ற நேர் செற் கணக்கில் எவான்ஸை வீழ்த்தி 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். தோல்வி கண்ட எவான்ஸ் தொடரிலிருந்து வெளியேறினார். (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 37 எலும்புக்....

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரிசாலை சித்துப்பாத்தி மனித புதைகுழி வழக்கின் இரண்டாம் கட்டத்தின் ஒன்பதாம் நாள் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் தொல்லியல் துறை பேராசிரியர் ராஜ்சோமதேவா, சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் ஆகியோரின் பங்கேற்போடு முன்னெடுக்கப்பட்டது.

முதலாம் மற்றும் இரண்டாம் கட்ட அழ்வுகளின் போது இதுரை 42 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன.

சந்தேகத்திற்குரியதாக கருதப்பட்டு புதிதாக அகழப்படும் பகுதியில் சிறுமி ஒருவரின் ஆடை ஒன்றும் அகழ்ந்தெடுக்கப்பட்டது - என்றார். (அ)

## வடக்கு...

விடயத்தில் கடந்தகால அரசுகளை விட எமக்கே கூடுதல் பொறுப்பு உள்ளது. கடந்த வரவு - செலவுத் திட் டத்தில்கூட வடக்குக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எவ்வித பாகு பாடும் காட்டப்படவில்லை.

காணாமல்ஆக்கப்பட்டோர் பிரச்னை உள்ளிட்ட விடயங்களுக்கும் தீர்வு காணப்பட வேண்டும். எமது பிரச்னையை அரசாங்கம் உணர்ந்துள்ளது, எனவே, நீதியை வழங்கும் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் ஏற்பட்டால் தான் பிரச்னைகள் முழுமையாக தீரும். அதற்குரிய நடவடிக்கையையே நாம் முன்னெடுத்துவருகின்றோம்-என்றார். (அ)

## அமெரிக்க....

இது இலங்கைக்கு பெரிய நெருக்கடியை ஏற்படுத்தக் கூடும் என்று உலகளாவிய கடன் வழங்குபவர் விரிவாக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்தின் நான்காவது மதிப்பாய்வை சுமார் 350 மில்லியன் டொலருக்கு அங்கீகரித்த பின்னர் கூறினார். எனினும், ட்ரம்பின் முழு வரி விதிப்பானது மூன்று மாதங்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டது.

ஆனால் இலங்கையிலிருந்து அமெரிக்க இறக்குமதிகள் இன்னும் பிற நாடுகளைப் போலவே 10 வீத அடிப்படை வரிக்கு உட்பட்டதாகவே இருக்கும்.

இந்த நிலையில், சர்வதேச கடன் வழங்குனர்களின் திட்டத்தின் வரையறைகளுக்குள் தாக்கத்தை மதிப்பிடுவதற்கும் கொள்கை பதில்களை உருவாக்குவதற்கும் அதிகாரிகளுடன் நெருக்கமாக பணியாற்ற வேண்டும் என்று இலங்கைக்கான சர்வதேச நாணய நிதிய த்தின் திட்டத் தலைவர் இவான் பாபஜெர்ஜியோ ஒரு ஒன்லைன் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

அத்துடன், மீதமுள்ள அதிகாரப் பூர்வ மற்றும் வணிக கடன் வழங்குநர்களுடனான இலங்கையின் இருதரப்பு ஒப்பந்தங்களை சரியான நேரத்தில் இறுதி செய்வது முன்னுரிமை என்று பாப்பஜோர்கியோ மேலும் சுட்டிக் காட்டினார்.

கடந்த ஆண்டு சுமார் 22.5 பில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடனை மறுசீரமைக்க முக்கிய கடன் வழங்குநர்களுடன் இலங்கை ஒரு முதற்கட்ட ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

இதில் சீனாவுடன் சுமார் 4.75 பில்லியன் டொலர் கடன்களுக்கான ஒப்பந்தம் அடங்கும்.

இலங்கையின் மத்திய வங்கி விலை ஸ்திரத்தன்மைக்கு தொடர்ந்து முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும், மேலும் அடுத்த ஆண்டுக்கான அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தைத் தொடர வேண்டும் என்றும் பாபஜெர்ஜியோ செய்தியாளர்களிடம் கூறினார்.

கடந்த ஆண்டு 5 வீத வளர்ச்சியைப் பெற்ற இலங்கை இந்த ஆண்டு 3.5 வீத வளர்ச்சியை அடையும் பாதையில் உள்ளது என்று உலக வங்கி அதன் அண்மைய அறிக்கையில் தெரிவித்துள்ளது. (அ)

# அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தம் முன்னேற்றம் தொடர்பில் ஹர்ஷ கேள்வி

கொழும்பு, ஜூலை 05

அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான முன்னேற்றம் தொடர்பில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் தனது எக்ஸ் தளத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது-

ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கவும் அவரது அரசாங்கமும் மக்களுக்கு என்ன செய்கிறார்கள் என்பது தெரியும் பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வது மட்டுமல்லாமல், வலுவான வளர்ச்சியைப் பதிவு செய்வதாகவும் உறுதியளித்தனர்.

இலங்கையும் அமெரிக்காவும் பரஸ்பர வரிகள் தொடர்பாக கூட்டு அறிக்கையை வெளியிடும் என அரசாங்கம் முன்னதாக கூறியது. ஆனால் அரசாங்கத்தின் பெரும்பாலான கதைகளில் இதுவும் ஒன்று.

இந்த விடயத்தில் எதிர்க்கட்சிகள் உதவுவதற்கு முன்வந்தபோது அரசாங்கம் நிராகரித்தது. இன்னும் சில நாட்கள் உள்ளன, அந்த நாட்களை அவர்களுக்கு வழங்குவோம்.

இலங்கை வியட்நாமை விட சிறந்த அமெரிக்க கட்டண ஒப்பந்தத்தை மேற்கொள்ளுமா? அமெரிக்காவுடனான கட்டண பேச்சுவார்த்தைகளின் தற்போதைய நிலை குறித்து நான் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியபோது, ஜூலை 09 காலக்கெடுவிற்கு முன்னதாக அமெரிக்காவுடன் ஒப்பந்தம் மேற்கொள்ள பேச்சுவார்த்தை நடத்தும் ஆசியாவின் ஒரே நாடு இலங்கை என்றும், முன்னேற்றம் மற்றும் நேர்மறையான முடிவுகள் எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சர் அனில் ஜெயந்த பெருமையாகக் கூறினார். எவ்வாறாயினும் வியட்நாம் ஏற் கனவே இந்த வாரம் தங்கள் 46% பரஸ் பர கட்டணத்தை 20 வீதமாகக் குறைக்க ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

மேலும் சில எச்.எஸ் குறியீடுகள் உட்பட ஒரு ஒப்பந்தத்தை இறுதி செய்ய இந்தியா 24 மணி நேரமும் உழைத்து வருகிறது.

இந்த ஆண்டு இறுதியில் விரிவான வர்த்தக ஒப்பந்தத்தை அவர்கள் திட்டமிட்டுள்ளனர் - என பதிவிட்டுள்ளார்.

# பொதுத்துறை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 05

நாட்டின் பொதுத் துறையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று அறிவித்துள்ளார்.

அரசு துறையின் பௌதீக வளங்களை மேம்படுத்தும் நோக்கில் எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று ஆரம்பிக்கப்பட்ட "பிரஜா சக்தி தேசிய திட்டம்" நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் மனிதவள மேம்பாட்டுக்காக அரச ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்தியதாக அவர் குறிப்பிட்டார்.

அதேபோல், மாவட்ட செயலகங்கள் போன்ற அரச நிறுவனங்களுக்கு தேவையான வாகனங்களை வாங்குவதற்கும் நிதி ஒதுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அரசுத் துறையை மக்களுக்கு பயனளிக்கக்கூடிய வகையில் மாற்றுவதே அரசின் இலக்காகும் என அவர் தெரிவித்துள்ளார். (அ)

# போராட்டத்தில் குதித்த பாடசாலை மாணவன்

வவுனியா, ஜூலை 05

வவுனியா பூந்தோட்டம் மகா வித்தியாலய மாணவன் ஒருவன் தன்னை பாடசாலையின் கல்விச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லவில்லை என தெரிவித்து வலயக்கல்வி அலுவலகம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

குறித்த பாடசாலையால் நேற்று திருகோணமலை மாவட்டத்துக்கு கல்விச் சுற்றலா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்காக மாணவர்களிடம் இருந்து முன்னமே பணம் அறவிடப்பட்டுள்ளது.

குறித்த மாணவனும் சுற்றுலாவுக்கான பணத்தினை வழங்கியுள்ளார். இருப்பினும் நேற்று காலை சுற்றுலாவுக்கு செல்வதற்கு மாணவன் தயாரான நிலையில் மாணவனை அழைத்துச் செல்ல முடியாது என அதற்கு பொறுப்பான ஆசிரியர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் கவலையடைந்த மாணவன் தனது பெற்றோருடன் வலயக்கல்வி அலுவலகம் முன்பாக சத்தியாகிரக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தான்.

இதனையடுத்து வலயக்கல்வி அதிகாரிகள் பாடசாலை நிர்வாகத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி மாணவனைச் சுற்றுலா அழைத்துச்செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை வழங்கியிருந்தனர். இதனையடுத்து மாணவன் தனது போராட்டத்தை கைவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கைது...

பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் நாமல் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டார்.

இதன்போது முன்னாள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன கைது செய்யப்பட்டுள்ள விவகாரம் தொடர்பில் எழுப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

" இந்நாட்டின் சுயாதீன நீதித்துறை மற்றும் நீதிபதிகள்மீது எமக்கு நம்பிக்கை உள்ளது. எனவே, எமக்கு எதிராக குற்றச்சாட்டுகள் இருந்தால் அவற்றை சட்டத்தின் பிரகாரம் எதிர்கொள்வோம். குற்றமற்றவர்கள் என்பதை நீதிமன்ற நடவடிக்கை ஊடாக நிரூபிப்போம்.

அச்சுறுத்தல்மூலம் எதிரணிகளை மௌனிக்க வைக்கலாம் என அரசாங்கம் நினைத்தால், அது ஒருபோதும் நடக்காது. அரசாங்கம் தவறிழைந்தால் அதனை தொடர்ந்து துணிவுடன் சுட்டிக்காட்டுவோம்." - எனவும் நாமல் குறிப்பிட்டார். (அ)

## பருத்தித்துறை...

இதன்போது காயமடைந்தவர்கள் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(அ)

## யாழில்....

கொண்டு சென்றவேளை குழந்தை ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

பின்னர் சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு உடற்கூற்று பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும் மரணத்துக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை அச்சுவேலி பொலிஸார் நெறிப்படுத்தினர். (அ)

# ஆறு மாதங்களுக்குள் 62 துப்பாக்கிச் சூடுகள்!

கொழும்பு, ஜூலை 05

2025 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் நாட்டில் 62 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களினால் 34 பேர் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவற்றில் 44 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பாதாள உலக கும்பல்களுக்கு இடையிலான மோதல்கள் காரணமாக இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதேவேளை, நேற்று முன் தினம் வியாழக்கிழமை மாத்திரம் நாட்டில் மூன்று துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

அதன்படி, கந்தானை பொதுச் சந்தைக்கு அருகில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் அவர்களில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அத்துடன், நீர்கொழும்பு - துன்கல் பிட்டிய பிரதேசத்தில் நேற்று முன் தினம் பிற்பகல் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மேலும், ராகதை, படுவத்தை பகுதியில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் படுகொலை செய்யப்பட்ட பாதாள உலக கும்பலின் தலைவரான கணேமுல்ல சஞ்சீவவின் நெருங்கிய நண்பரான ஆமி உப்புள் என்பவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

## தேர்...

மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த உயிரிழப்பு சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

## முன்னாள்...

விசாரணைகளுக்கு அமைவாக வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்காக நேற்று காலை இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவில் அவர் முன்னிலையாகியிருந்தார்.

இந்நிலையில் வாக்குமூலத்தை பதிவு செய்த பின்னர், முன்னாள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன கைது செய்யப்பட்டார். (அ)

## முன்னேற்ற...

சீர்திருத்தங்கள் பலனளிக்கின்றன, பொருளாதார வளர்ச்சி வலுவடைகிறது, பணவீக்கம் குறை வாகவே உள்ளது, இருப்புக்கள் குவிந்து வருகின்றன.

இந்தநிலையில், இலங்கையின் அதிகாரிகள், தமது நிதியத்துடன் நெருக்கமாகப் பணியாற்ற வேண்டும் என்று, சர்வதேச நாணய நிதிய நிர்வாகக் குழுவின் துணை நிர்வாக இயக்குநரும், செயல் தலைவருமான கென்ஜி ஒகமுரா வலியுறுத்தியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பொலிஸ், பாடசாலைகளிலேயே மனித உரிமைகள் மீறல் அதிகம்!

## மனித உரிமைகள் ஆணையாளர்



கண்டி, ஜூலை 05

பாடசாலைகள், பொலிஸ் தரப்பாலேயே மனித உரிமைகள் அதிகம் மீறப்படுகின்றன என்று என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

அத்துடன், 2020 முதல் மார்ச் 2025 வரை பொலிஸ் காவலில் இருந்தபோது 49 பேர் இறந்தனர். அத்துடன், பொலிஸாருடனான மோதல்களில் 30 பேர் உயிரிழந்தனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

மனித உரிமைகள் பாதுகாப்பு வழிமுறைகளை வலுப்படுத்துதல் மற்றும் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துதல் குறித்து பொது அதிகாரிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான செயலமர்வு கண்டியில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், பொலிஸைவிட பாடசாலை அமைப்பிலிருந்தே அதிக மனித உரிமைகள் மீறல் பதிவாகிறது. ஆசிரியர்கள் மாணவர்களை உடல் ரீதியாக தண்டிப்பது குறித்து அதிக முறைப்பாடுகள் எங்களுக்கு வருகின்றன.

இவற்றில் பகிடிவதை மற்றும் பிற வகையான துஷ்பிர யோக சம்பவங்களும் அடங்கும்.

ஒழுக்கம் என்ற சாக்குப்போக்கின் கீழ் குழந்தைகளுக்கு உடல் ரீதியாகவோ அல்லது மன ரீதியாகவோ தீங்கு விளைவிக்க ஆசிரியர்களுக்கு சட்டபூர்வ உரிமை இல்லை.

மாணவர்களுக்கு உடல் ரீதியாகவோ அல்லது மன ரீதியாகவோ தீங்கு விளைவிக்கும் பகிடிவதைகூட சட்டத்தின் கீழ் மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை மீறுவதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

சில பொலிஸ் அதிகாரிகள் விபச்சாரத்தில் ஈடுபட்டனர் என்று கூறி பெண்களைக் கைது செய்கிறார்கள்.

இருப்பினும், அந்த அடிப்படையில் மட்டுமே பெண்களைக் கைது செய்யும் அதிகாரத்தை பொலிஸாருக்கு வழங்கவில்லை.

விபச்சார விடுதிகளை நடத்துபவர்களுக்கு எதிராக அவர்கள் நடவடிக்கை எடுக்க முடியும்.

மசாஜ் பார்லரில் இருப்பது மட்டும் கைதுக்கு உத்தரவாதம் அளிக்காது," என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# கைது அச்சுறுத்தல் காட்டி எம்மை அடக்க முடியாது!

## நாமல் ராஜபக்ஷ எம். பி.



கொழும்பு, ஜூலை 05

"கைது செய்யப்படுவீர்கள், சிறையில் அடைக்கப்படுவீர்கள் என்று அச்சுறுத்தி எதிரணிகளை மௌனிக்க வைப்பதற்கு அரசாங்கம் முற்பட்டால் அது ஒருபோதும் நடக்காது", என்று கூறியுள்ளார் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்றார். நிகழ்ச்சி முடிந்து வெளியேறிய அவரிடம் செய்தியாளர்கள் முன்னாள் அமைச்சர் எஸ். எம். சந்திரசேன கைது விவகாரம் தொடர்பில் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"இந்நாட்டின் சுயாதீன நீதித்துறை மற்றும் நீதிபதிகள்மீது எமக்கு நம்பிக்கை உள்ளது.

எனவே, எமக்கு எதிராக குற்றச்சாட்டுகள் இருந்தால் அவற்றை சட்டத்தின் பிரகாரம் எதிர்கொள்வோம். குற் றமற்றவர்கள் என்பதை நீதிமன்ற நடவடிக்கை ஊடாக நிரூபிப்போம்.

அச்சுறுத்தல் மூலம் எதிரணிகளை மௌனிக்க வைக்கலாம் என அரசாங்கம் நினைத்தால், அது ஒருபோதும் நடக்காது. அரசாங்கம் தவறிழைந்தால் அதனை தொடர்ந்து துணிவுடன் சுட்டிக்காட்டுவோம்", என்றும் சொன்னார். (ஐ)

# போதைப்பொருள் வர்த்தகர் கைது!

கொழும்பு, ஜூலை 05

போதைப்பொருட்களை விற்பனை செய்து வந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தறை - திக்வெல்ல பொலிஸ் பிரிவிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து, ஐஸ், குஷ், கொக்கைன் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

# இலஞ்சம் வாங்கிய காதி நீதிபதி கைது

கொழும்பு, ஜூலை 05

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் பொலநறுவை - சுதுருவெல காதி நீதிமன்ற நீதிபதியும் எழுதுநரும் நேற்று இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய விசாரணை அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விவாகரத்து வழக்கு ஒன்று தொடர்பில் தீர்ப்பு வழங்குவதற்காக பெண் ஒருவரிடமிருந்து 10 இலட்சம் ரூபாயை பெற்றபோதே நேற்றைய தினம் இருவரும் கைது செய்யப்பட்டனர். (ஐ)

# ஏ. ஐ. தொழில்நுட்பம் மூலமாக தமிழ், சிங்கள மொழிபெயர்ப்பு

## அரசாங்கம் நடவடிக்கை



கொழும்பு, ஜூலை 05

செயற்கை நுண்ணறிவு (ஏ. ஐ.) தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தமிழ், சிங்கள மொழிகளுக்கான மொழி பெயர்ப்பு மென்பொருளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று டிஜிற்றல், பொருளாதார அமைச்சு தெரிவித்துள்ளது.இது தொடர்பில் டிஜிற்றல், பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன மேலும் தெரிவிக்கையில்,

இந்த மென்பொருளை உருவாக்க கொழும்பு - மொறட்டுவை பல்கலைக்கழகம் உட்பட பல பல்கலைக்கழகங்கள், தனியார் துறை என்பன ஒத்துழைப்பு வழங்கி வருகின்றன.

இந்த மென்பொருள் அடுத்த ஆறு மாதங்களுக்குள் பொதுமக்களின் பயன்பாட்டுக்குக் கிடைக்கும்.

புதிய மென்பொருளானது சிங்கள உள்ளடக்கத்தை கொண்ட குரல் பதிவுகளை சில நொடிகளில் தமிழில் மொழிபெயர்க்கும் திறனைக் கொண்டிருக்கும் - என்றார். (ஐ)

# இலங்கைக்கு கடத்தவிருந்த கடல் அட்டைகள் பறிமுதல்!

இராமேஸ்வரம், ஜூலை 05

இலங்கைக்கு கடத்துவதற்காக வைக்கப்பட்டிருந்த 132 கிலோ கடல் அட்டைகள் இராமேஸ்வரத்தில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பாம்பன் தெற்குவாடி கடற்கரையிலேயே நேற்றைய தினம் இந்தக் கடலட்டைகள் பறிமுதல் செய்யப்பட் டன.

சட்ட விரோதமாக கடல் அட்டைகள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளன என்று மண்டபம் வனத்துறை அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இவை கைப்பற்றப்பட்டன.

இதேவேளை சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரை கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பருத்தித்துறையிலிருந்து சென்ற பேருந்து சிலாபத்தில் விபத்து!

## பலருக்கு காயங்கள்

சிலாபம், ஜூலை 05

பருத்தித்துறையிலிருந்து கொழும்பு சென்ற பேருந்து சிலாபத்தில் விபத்துக்கு உள்ளானது. இதில், பலர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இ. போ. ச. பேருந்து ஒன்று வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் இடம்பெற்ற இந்த விபத்தில் பேருந்தில் பயணித்த பலர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் சிலாபம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# தெளிவான திட்டம் இல்லாததால் நாட்டில் மீளவும் நெருக்கடி வரும்!

## ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 05

தற்போதைய அரசாங்கத்திடம் தெளிவான பொருளாதாரத் திட்டமொன்று இல்லாததால் நாடு விரைவில் மீண்டும் கடும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் அபாயம் உள்ளது என முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியுள்ளார்.

களுத்துறை - மதுகமவில் நேற்றைய தினம் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு கூறினார். மேலும்,

"அரசியலில் யார் வெற்றி பெறுவார்கள், யார் சிப்பாயை போல் இழுக்கப்படுவார்கள் என விவாதிப்பது நேரத்தை வீணாக்குவது மட்டுமே. நாட்டை காப்பாற்ற விரும்பினால், அதை பொருளாதாரத்தின் வழியே மட்டுமே செய்ய முடியும். ஊழல் கட்டுப்பாடு, வளர்ச்சி ஆகியவை முக்கியமானவைதான். ஆனால், அதற்கு அடிப்படையானது பொருளாதாரம்.

தற்போதைய அரசாங்கம் பொருளாதாரத்தை மீண்டும் உருவாக்க வேண்டிய அவசியத்தை புரிந்துகொள்வதில்லை என்றும், அதற்கான திட்டமோ, நடவடிக்கையோ எதுவும் இல்லை. இவ்வாறு திட்டமின்றி செயல்பட்டால், ஒகஸ்ட் இறுதிக்குள் இந்த பொருளாதார நெருக்கடி மிகவும் கடினமான கட்டத்துக்கு நகரும். ஆண்டு இறுதிக்குள் அது தீவிரமாவதும் உறுதி. அடுத்த ஆண்டின் முதல்



காலாண்டில், முழு நாடும் மிகப் பெரிய நெருக்கடிக்கு உள்ளாகும்.

இதனைத் தவிர்க்க, அரசாங்கம் உடனடியாக அனைத்து தரப்பினருடனும் கலந்தாலோசித்து, நியாயமான மற்றும் செயல்திறன் கொண்ட பொருளாதாரத் திட்டத்தை உருவாக்க வேண்டும் எனவும், திவாலான நிலைமையிலிருந்து மீள்வது எளிதல்ல என்பது அரசாங்கம் உணர வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

# இலஞ்சம் வாங்கிய இருவர் கைதாகினர்

கொழும்பு, ஜூலை 05

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கண்டி பேராதனை கிருமிநாசினி பதிவாளர் பணிமனையின் அபிவிருத்தி உத்தியோகத்தரும் சாரதியும் இலஞ்சம், ஊழல் விசாரணை குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பண்டாரவளை வர்த்தகர் ஒருவர் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் வர்த்தகரிடமிருந்து 10 ஆயிரம் ரூபாயை இலஞ்சமாக பெற்றனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

வர்த்தகரின் கிருமி நாசினி, தொற்றுநீக்கி மற்றும் தாவர வளர்ச்சிக்கான மருந்து தயாரிப்பு உள்ளிட்ட வர்த்தகத்தை பதிவு செய்வதற்கும் கிருமிநாசினி சட்டத்துக்கு அமைவாக வர்த்தகரின் தயாரிப்புகளை பரிசோதிப்பதற்குமாக சந்தேகநபர்கள் இலஞ்சம் பெற்றுள்ளனர் என்று கூறப்படுகிறது. இலஞ்சம் கோரிய இருவரும் வர்த்தகரின் வீட்டுக்கு வந்தபோதே கைது செய்யப்பட்டனர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org